பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில்


# சுதந்திரன்
SUTANTIRAN

தொலே பேசி: 23411 | விலே சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, ஆவணி 30 (15-9-74) ஞாயிறு செ..8 ஷஃபா 27 புத்தகம் 28 இதழ் 3


# அதிர்வேட்டு!

## இங்கும் வங்கங்களும் சைப்பிரசுகளும் உருவாகுமா?

(சுதந்திரன் சிறப்பு நிருபர்)

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இம்மாதம் 6ந்திகதி தொடங்கி 14ந் திகதி முடிவடைந்த பொதுநலவரசுப் பாராளுமன்ற மாநாட்டில் இரண்டாம் நாளாகிய 7ந் திகதி சனிக்கிழமை காலேயில் இலங்கைத் தேசியப் பேரவையின் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள் ஒரு பெரிய சொற்குண்டை எடுத்து வீசியிருந்தார். 'தென்கிழக்கு ஆசியாவும் ஏனைய பிராந்தியங்களில் அமைதியும் நடுநிலேமையும்' என்ற விடயத்தின்மீது மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதிகளுள் ஒருவராகக் கலந்துகொண்டு அவர் ஆற்றிய உரை அதிர்வேட்டாக அமைந்திருந்தது. அவரது முழு உரையும் பின்வருமாறு:-

அவைத் தலேவர்களே,

எனது முதற்பணி என்னே இந்த அவைக்கு அறிமுகப்படுத்திக்கொள்வதாகும். எனது பெயர் நவரத்தினம் ஆகும். இலங்கைத் தேசியப் பேரவையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் ஒருவன் நான். இந்த முறை இம்மாநாட்டுக்கு வந்திருக்கும் எமது குழு, எமது பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளின் தலேவர்களேக் கொண்டதாகவுள்ளது.

நான் தமிழர் கூட்டணியின் சார்பில் வந்திருக்கின்றேன். இந்த மாநாட்டிலும் இதற்கு வெளியிலும் இன்று பலர் பலருக்காக கடமையாற்றவேண்டிய நிலே ஏற்பட்டுள்ளது. எமது குழுவின் தலேவரான கௌரவ மைத்திரிபால சேனநாயக்கா அவர்கள் பதில் பிரதமராக விருந்து கடமையாற்றுகிறார்.

கலாநிதி திலான் அவர்கள் வராததால் கலாநிதி ஒஸ்ரின் அவர்கள் அவருடைய கடமையைச் செய்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். நானும், என்னுடைய தலேவரும் தமிழர் கூட்டணியின் தலேவருமான திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் கியூ.சி. அவர்களுக்காகக் கடமையாற்றுகின்றேன்.

திரு. செல்வநாயகம் அவர்கள், தான் சுமார் இருபது வருடங்களாகத் தொடர்ந்து பிரதிநிதித்துவம் வசித்துவந்த பாராளுமன்ற ஆசனத்தை கடந்த 1972ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் நாள் இராஜிநாமாச் செய்திருந்தார்.

இந்தநாட்டு அரசாங்கம் இந்த நாட்டுத் தமிழ் மக்கள் மீது அவர்களுடைய விருப்பத்துக்கு எதிராக ஒரு புதிய அரசியல் சட்டத்தைத் திணிப்பதை எதிர்த்து திரு. செல்வநாயகம் அவர்கள் தனது பிரதிநிதித்துவத்தை இராஜிநாமாச் செய்து அதனுல் ஏற்படும் இடைத்தேர்தலில் தன்னுடன் போட்டியிடும்படி அரசாங்கத்துக்கு அறைகூவல் விடுத்திருந்தார். இந்த இடைத்தேர்தல் புதிய அரசியல் சட்டத்தின்படி மூன்று மாதங்களுக்குள் நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனுல், திரு. செல்வநாயகம் அவர்கள் இராஜிநாமாச் செய்து சுமார் இரண்டாண்டுகள் உருண்டோடி விட்டபோதிலும் இவ் இடைத்தேர்தல் நடத்தப்படாமல் பாராளுமன்றத்தில் காங்கேசன்துறைத் தொகுதியின் இடம் இன்றும் காலியாகவே இருந்துவருகின்றது. நானும் இன்னமும் எனது தலேவருக்காகப் பதில் கடமையாற்றிக்கொண்டிருக்கிறேன். எனது தலேவர் திரு. செல்வநாயகம் கியூ. சி. அவர்களின் நற்செய்திகளேயும் வாழ்த்துக்களேயும் உங்களுக்குக் கூறுகிறேன்.

அவைத் தலேவர் அவர்களே!

இங்கு நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் விடயம் மிகவும் விசாலமானது. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் குறுகியகால எல்லேயின் நிமித்தம் நான் ஒரே ஒரு அம்சத்தை—ஒரு புதிய அம்சத்தை—மட்டும் இங்கு கூறிக்கொள்ளுகின்றேன்.

உள்நாட்டுப் பிரச்சினே என்று சிலரால் வசதிக்காகச் சொல்லிக் கொள்ளப்படுவது ஒரு பிரதேசத்தில் அமைதிக்குப் பங்கம் விளேவிப்பதோடு யுத்த நிலேமைகளையும் ஏற்படுத்திவிடக்கூடும் என்பதை உலகிலுள்ள எல்லா நாடுகளும், பொது நலவரசைச் சேர்ந்த நாடுகளும் குறிப்பாக இந்த மாநாட்டில் பங்கு பற்றிக் கொண்டிருக்கின்ற பிரதிநிதிகளும் நன்கு உணர்ந்து கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமும் முக்கியமுமானதாகும்.

வரலாற்றிலிருந்து நாங்கள் பாடங்கள் கற்றுக் கொள்ளவேண்டும். தன்னுதிக்கமும் சுதந்திரமும் உடைய இரு நாடுகளின் உறவுகளுக்கிடையில் சச்சரவோ நெருக்கடியோ இருக்கும் பொழுதுதான் சிளர்ச்சியும் கொந்தளிப்பும் யுத்தத்துக்கான நிலேமைகளும் ஏற்படுமென்பதல்ல. உள்நாட்டுப் பிரச்சினே என்று ஒருவர் கூறக்கூடிய ஒன்று ஒரு பிரதேசத்தில் வெடித்து நெருக்கடியையும் முரண்பாட்டையும் ஏற்படுத்தும் போதும் அது எழக்கூடும். இந்த அடிப்படையான உண்மையையும் புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

—மிகுதி 3-ம் பக்கம்

## உயர்நீதிமன்றம் - இனிச் சிங்களத்தில்

காணி சுவீகரிப்பு வழக்கில் உயர் நீதி மன்றம் அரசாங்கத்துக்கு எதிராக தீர்ப்பு வழங்கியமைத் தொடர்ந்து நடந்த அரசாங்க பாராளுமன்ற கூட்டத்தில் உயர் நீதி மன்றம் சிங்களத்தில் பணிபுரிய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியது.

5-9-74-இல் தேசிய பேரவையில் பேசிய நீதி அமைச்சர் உயர் நீதி மன்றப் பணி சிங்களத்தில் இனி நடைபெறும் என்றும் அதற்கு வழி செய்ய நீதிமன்றம் மாற்றியமைக்கப்படும் என்றும் சொன்னுர்.

அவர் மேலும் பேசியதாவது — 1972 இல் சட்டவியாக்கியான சட்டத்தை நாம் ஆங்கிலத்திலேயே தான் நிறைவேற்றினேம். அதனுல்தான் இப்பேரவையின் கருத்தை வலியுறுத்த கூடிய பொருத்தமானஒரு சொல்லே நாம் அந்தச் சட்டத்தில்புகுத்த முடியாமல் போய்விட்டது. எனவே இம்மசோதாவினுல் சட்டமாகும் சட்டவியாக்கியானசட்டத்தின் 24 (1) 24 (2) சரத்துக்கள் சட்டப்புத்தகத்தில் சிங்களத்திலேயே புகுத்தப்படும். அப்போதுதான் இப்பேரவை உண்மையான நிலேயை இனி மேலாவது நீதிபதிகள் தெளிவாகவிளங்கிக் கொள்வார்களென்று நினேக்கிறேன்.

## 'சுதந்திர'னே தடை செய்க!

### எட்டப்பர்கள் வேண்டுகோள்!

தமிழ் இளேஞர்களேப் பிழையான வழியில் நடத்திச் செல்லும் 'சுதந்திரன்' பத்திரிகையையும் தடைசெய்யவேண்டும் என்பன போன்ற பல பிரேரணேகள் (வடபகுதிசு.க. அமைப்பாளர்கள்) கருத்தரங்கில் கொண்டுவரப்பட்டன.—(வீரகேசரி வெளியூர் பதிப்பு- 23.8.74).

## சிங்கலீசம்

இந்த (நிலச் சீர்திருத்த) மிகப்பெரும் முற்போக்குத் திட்டத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் தங்களுக்கு புதுவாழ்வு கிடைக்கப்போவதை எண்ணி, பெரும்பான்மை வாலிப சமுதாயத்தின் மத்தியில் மடை திறந்த மகிழ்ச்சிப் பிரவாகம் காணப்படுவது கண்கூடு. இந்த மகிழ்ச்சிப் பிரவாகத்தில் தாமும் தோய்ந்துகொள்ள கடும் உழைப்பில்ஊறியபரம்பரையானமலேயகத் தமிழ்வாலிபர்களுக்கு இடம்இல்லேயா?

## யாழ் மாநகராட்சிமன்ற காணி துரையப்பரது முதிசமா?

யாழ்ப்பாணத்தில் நடந்த 4வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு இறுதி நாள் சம்பவத்தில் மரணமான தமிழ் தியாகிகளுக்கு நினேவுச் சின்னம் நிறுவுவதற்கு இடம் ஒதுக்கி தருமாறு ஞாபகச் சின்ன அமைப்புக் குழு யாழ் மாநகராட்சி மன்றத்துக்கு விடுக்கப்பட்ட கோரிக்கை யாழ் மேயரால் தட்டிக்கழிக்கப்பட்டு வருகிறது.

யாழ் மாநகராட்சிக்கு சொந்தமான காணி தனது சொந்தச் சீதனக் காணி அல்லது முதிசம் என்று யாழ் மேயர் நினேக்கிருரோஎன்று தமிழ் பொது மக்கள்வினு எழுப்பியுள்ளனர்.

என்ன தான் வேடம் போட்டு நாடகமாடினுலும்யாழ்மேயரின்உள்ளக் கிடக்கை தமிழ்மக்களுக்கு புரியாமலில்லே.

### வன்னியர் நினேவு விழா

இத் திங்கள் செவ்வாய்க் கிழமை (17-9-74) மாலே 6-00 மணிக்கு கொல்லன் கலட்டி மைதானத்தில் மறைந்த தலேவர் திரு. வன்னியசிங்கம நினேவு விழா நடைபெறுகிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# எண்ணம்

## பேச்சு வார்த்தையா? ஆசை வார்த்தையா?

முதன் முறையாக தமிழ் தேசிய இனப் பிரச்சினை பற்றி ஒரு சர்வதேச அரங்கில் குரல் எழுப்பப்பட்டுள்ளது.

முதல் குரல் என்ருலும் அது முழுக் குரலாக ஒலித்திருப்பது போற்றத்தக்கது.

சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினத்தின் இந்த முதல் முழக்கம் சிங்கள ஏகாதிபத்தியத்தின் துயிலே ஒரு சர்வதேச மேடையில் வைத்து உரிய நிச்சயமாக உதவியிருக்கிறது.

கிடைத்த சந்தர்ப்ப—சூழ்நிலையை முறையாகப்பயன்படுத்திய திரு. வி. என். நவரத்தினம் (பா. உ.) அவர்களை தமிழ் மக்கள் சார்பில் நன்றி சொல்லிப் பாராட்டவிழைகிருேம்.

ஒரு விடுதலை இயக்கத்தின் தளபதிகளில் ஒருவர் என்ற முறையில் அவரது பணி அவரது இயற்கையான கடமையென்ருலும்—அந்த பணியையும்—கடமையையும் சரிவர செய்து முடித்திருக்கிருர் என்பதற்காகவே நன்றியும்—பாராட்டும் தெரிவிக்கிருேம்.

தமிழ் தேசிய இனப்பிரச்சினை சர்வதேசியப் பிரச்சினையாக்கப்படுவதாலேயே எமக்கு விடுதலை கிடைத்துவிடப்போவதில்லை. ஆனுல் விடுதலைக்கு நாம் தொடுத்திடும் பல முனைப் போராட்டத்தில் இது ஒரு முனைப்போர் என்பது மட்டும் நிச்சயம்.

அழுதும் அவளே பிள்ளைபெறவேண்டு மென்பதுபோல் தமிழின் விடுதலைக்கு தமிழ் மக்களே போராடி வெற்றி வாகை சூடவேண்டும்!

இன விடுதலை — சுதந்திரம் என்பது சுக்கும் இல்லை— மிளகும் இல்லை என்ற அரசியல் பாலபாடம் எமக்குத் தெரியாததொன்றல்ல.

கொடுக்கப்படவேண்டிய தலையும்—விலையும் கொடுக்கப்படும்பொழுது, கனி பழுத்தால் எப்படி மரத்தில் இருக்காதோ, அதே போல இன விடுதலை தாஞக வரும்!

இந்நாள் வரை நாம் விடுதலைக்குக் கொடுத்தது அச்சவாரமே! கொடுக்கவேண்டிய மிகுதித் தொகை நிறைய இருக்கிறது!

வயிறு நொந்து பிள்ளையை நாம் தான் பெற்றேஆக வேண்டுமென்ருலும் மற்றவர்கள் மருத்துவச்சி வேலை நிச்சயம் பார்க்க முடியும்.

வங்காளத்தின் சுகப் பிரசவத்திற்கு பாரத மருத்துவச்சி வேலை செய்து உதவியதை நாம் மறப்பதற்கில்லை.

இந்தக் கண்ணேட்டத்தில்தான் தமிழ் இனப் பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையாக்கப் படுவதை இராஜதந்திரமான நடவடிக்கை என வரவேற்கிருேம்.

திரு. வி. என். நவரத்தினம் (பா. உ.) அவர்களுடைய சொல்லம்புகள் தைக்க வேண்டிய இடத்தில் தைத்திருப்பதற்கு அடையாளமாக நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் பேச்சு அமைந்திருக்கிறது.

ஆனுல் துரதிட்டவசமாக நீதி அமைச்சரின் பேச்சு பழையபடி வேதாளம் முருக்கமரத்தில் ஏறிய கதையாக இருக்கிறது.

வடபகுதிக்கு விஜயம் செய்யும் பொழுதும் சர்வதேச அரங்கில் தமிழினப்பிரச்சினைஎழும்பொழுதும்தான் அமைச்சருக்கு தமிழ் மக்களது பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டுமென்ற ஞானேதயம் பிறக்கவேண்டுமா என்பது ஒருபுறமிருக்க, நீதி அமைச்சர் தமிழினத்தின் ஐந்தாம்படை மத்தியில் கொச்சைத், தமிழில் பேசுவதாலேயோ தமிழ் தலைவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் பேசுவதாலேயோ நிச்சயமாக இப்பிரச்சினை தீராது என்பது மட்டும் உண்மை.

பிரச்சினையை தட்டிக் கழிக்கவே நீதி அமைச்சர் இப்படிப் பேசுகிருர் என்று நாம் கருதுகிருேம்.

தமிழர்களது அரசியல், மொழி நில உரிமைகள் அவர்களது அடிப்படை உரிமைகள். அதைச் சிங்கள மக்களிடம் பிச்சைகேட்டு வாங்கவேண்டிய அவசியம் தமிழ் மக்களுக்கு நிச்சயமாக இல்லை. அதற்கு நாம் தயாராகவுமில்லை.

உண்மையில் இப்பிரச்சினையை தீர்க்க சிங்கள அரசுக்கு ஆசை இருந்தால் தமிழ் இனத்தைப் பிரித்து ஆளும் திட்டத்தோடு தமிழ் மக்களிடை உருவாக்கப்பட்டிருக்கும் ஐந்தாம் படையோடு, சிங்கள அமைச்சர்கள் பேசுவதை விடுத்து தமிழ் மக்களால் முறையாகத் தெரிந்தெடுத்த, அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் தலைவர்களுடன் அரசு பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க வேண்டும்.

தமிழ் மக்களது குறைந்தபட்ச கோரிக்கைகள் தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக்கோரிக்கை உருவில் இருக்கிறது.

நீதி அமைச்சரும் சிங்கள அரசும் இதய சுத்தியுடன் பேச்சுவார்த்தைபற்றி எண்ணுவதாயிருந்தால் அடிப்படையில் தமிழ் தலைவர்களுடன் பேச முன்வர வேண்டும். இல்லையேல் பேச்சுவார்த்தை என்ற பேச்சு வெறும் ஆசை வார்த்தையாக முடியும்.

மலையக தமிழர்

# முதல் பெயர் மாற்றம்! அடுத்து மத மாற்றம்! இறுதியில் இனமாற்றம்! அமைச்சரே சொல்கிருர்!

இந்த நாட்டு சிங்கள அரசின் கடந்தகால, நிகழ்கால அரசியல், பொருளாதார நடவடிக்கைகளை வைத்துக்கொண்டு சிங்கள ஏகாதிபத்தியம், ஆங்கில ஏகாதிபத்தியத்தை விட கொடுமையானது — அபாயமானது என்று ஓராயிரம் உதாரணங்களை அடுக்கிக்காட்டி எடுத்துச் சொல்லவிரும்புகிருேம்.

ஆங்கில ஏகாதிபத்தியம் அந்நிய ஏகாதிபத்தியம் நாட்டுக்கு விடுதலை கிடைத்தவுடன் மூட்டை முடிச்சுகளுடன் வெள்ளையர்கள் வெளியேறி விட்டனர் மத மாற்றம் நடந்தது. ஆனுல் இனமாற்றம் அரசு முயற்சியால் நடைபெறவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்ப் பூமி கொள்ளை போகவில்லை.

சிங்கள ஏகாதிபத்தியம் உள்நாட்டு ஏகாதிபத்தியம். சுதந்திரத்துக்குப்பின் தமிழ் சிறுபான்மை இனத்தை மத, இனமாற்றம் செய்ய அசுர வேகத்தில் திட்டமிட்டு காரியமாற்றி வருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக பரம்பரையான தமிழ் பூமி சிங்கள ஏகாதிபத்திய நில விஸ்தரிப்புக் கொள்கைக்கு இரையாகி நாளும்—பொழுதும் விழுங்கப்பட்டு வருகிறது.

பட்டிப்பளை, அல்லை, கந்தளை முதலிக் குளம், பாவற்குளம், இவையெல்லாம் சிங்களக் குடியேற்றத்திற்கு இரையாகி இன்று அசல் சிங்கள கிராமங்களாக — பெயர் மாற்றத்தோடு — காட்சியளிக்கின்றன.

முழுக்க, முழுக்க தமிழ் கிராமங்களான தென்னமரவடியும், புல்மோட்டையும் கூட திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து வெட்டப்பட்டு அநுராதபுர மாவட்டத்தோடு ஒட்டப்பட்டு விட்டது.

வடபகுதியில் மதமாற்றம் நடைபெற்று வருகிறது. மத மாற்றத்தை தொடர்ந்து மொழிமாற்றம், அதைத் தொடர்ந்து இனமாற்றம் செய்ய சிங்கள ஏகாதிபத்தியம் எடுத்த முயற்சிகள் தமிழர்கூட்டணியின் எதிர்ப்புக் காரணமாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஆனுல் மலையகத்தில் அங்குள்ள எஞ்சிய 8 இலட்சம் தமிழ் மக்களை மதமாற்றம் இனமாற்றம் செய்து அவர்களை பெரும்பான்மை சிங்கள இனத்துடன் சங்கமமாக்கிவிட சிங்கள ஏகாதிபத்தியம் தற்பொழுது துரித கெதியில் செயல்பட்டு வருகிறது.

தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டு அவை அரசுடமையாக்கியது இந்த மத இன மாற்றத்துக்கு 'பச்சைக் கொடி' காட்டியதுபோலாகி விட்டது.

முயற்சி வெற்றி வெற்றியென்று காணி அமைச்சர் கொப்பேகடுவேயே மார் தட்டிப் பேசியிருக்கிருர். அமைச்சரது பேச்சில் ஒளிவு மறைவு இல்லை. சிங்கள ஏகாதிபத்தியத்தின் திட்டத்தை பச்சையாகவே அமைச்சர் பறைசாற்றுகிருர்.

அமைச்சரது பேச்சு அரசாங்க கசட்டான டெயிலி நியூஸ் (27-8-74) பத்திரிகையில் வந்திருக்கிறது. அதன் தமிழாக்கத்தை அப்படியே தருகிருேம்.

"எமது வருங்காலக் குறிக்கோள்கள் என்ன? முக்கியமான விடயம் என்னவென்ருல் கிராமங்களால் சூழப்பட்டு குட்டி குட்டி இங்கிலாந்து போன்று இருந்த தோட்டங்கள் கிராமத்தோடு ஒட்டிய பகுதியாக சேர்க்கப்படவேண்டும்.

கடந்த காலம்போல் இரண்டு விதமான அமைப்புகள் இருப்பதை நாம் அனுமதிக்க முடியாது. அவை (தமிழ் தோட்டம் சிங்கள கிராமம்) ஒன்ருக்கப்பட்டு ஒன்ருகச் செயல்பட வேண்டும். இதுதான் மிக முக்கியமான மாற்றமாக இருக்கப் போகின்றது. இந்த மாற்றம் சில இடங்களில் நடைபெறுவதை ஏற்கனவே நான் பார்க்கக்கூடியதாக இருக்கிறது."

அமைச்சரது வகுப்புவாத இனவாத கக்கல் இத்துடன் முடியவில்லை. தொடர்ந்து விஷத்தை கக்கியிருக்கிருர்.

"சிலர் எதிர்பார்ப்பது போல சிங்கள — தமிழ் தொழிலாளர்களுக்கிடையில் பாகுபாடுகாட்டப்பட மாட்டாது. அது இந்தியத் தமிழராயிருந்தாலும் சரி— இலங்கைத் தமிழராயிருந்தாலும்சரி நான் இவர்களுக்கிடையில் வித்தியாசம் காட்டப்போவதில்லை. உண்மையென்னவென்ருல் முன்பு ஒதுங்கியிருந்த பல இந்தியத் தமிழர்கள் இப்போது சிங்களம் படிக்க ஆரம்பித்திருக்கிருர்கள். அதுமட்டுமல்ல அவர்கள் எங்களது சிங்களப் பெயர்களைச் சூட்டிக்கொண்டு — எங்களது மதத்தையும் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இது சிங்களச் சமுதாயத்தில் அவர்களைச் சேர்ப்பதின் ஒரு பகுதியாகும்."

சிங்கள ஏகாதிபத்தியத்தின் தூரநோக்குத்திட்டம் எதுவென்பதில் இதன் பிறகு யாருக்கும் துளியும் சந்தேகம் இருக்கத்தேவையில்லை.

மலையகத்தில் எஞ்சியிருக்கும் 8 இலட்சம் தமிழர்கள் 60 இலட்சம் சிங்களவர்களுடன் சங்கமமாக்கப் போகிருர்கள்.

இந்தபகிரங்கமான ஆனுல் பயங்கரமான மத — இன மாற்றத்தை தடுத்துநிறுத்த தமிழர் கூட்டணித் தலைவர்கள் விரைந்து செயலாற்ற முன்வரவேண்டும்.

—வண்ணங்காமுடி

# தமிழ் ஊழியர்கள் தொண்டைக்குள் சிங்களத் திணிப்பு!

துறைமுக ஒத்துப் பார்த்தல் பாதுகாத்தல் சேவைகள் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் பழைய தமிழ் ஊழியர்கள் சிங்களத்தில் கடமையாற்றும்படி கேட்கப்படுகின்ருர்கள்.

இது பற்றிய சுற்றறிக்கை ஒன்றை கூட்டுத்தாபன பொது முகாமையாளர் ஊழியர்களுக்கு அண்மையில் விடுத்திருக்கிருர். உள் நிர்வாகத்திற்கும் தனிச்சிங்களத்தை உபயோகிக்க கூட்டுத்தாபனம் முனைந்துள்ளது. இதனுல் சிங்களம் தெரியாத தமிழ் ஊழியர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். முதல் முறையாக பதவி உயர்வுக்கும் சிங்களத்தேர்ச்சி கட்டாயம் ஆக்கப் பட்டிருக்கின்றது.

கடந்த காலத்தில் கூட்டுத்தாபனத்தால் விடுக்கப்படும் சுற்றறிக்கைகள் கடிதங்கள் முதலியனவற்றிற்கு தமிழ் மொழி பெயர்ப்பு கொடுக்கப்படும் என்று தலைவர் செல்வநாயகம் அவர்களுக்கு கப்பல் போக்குவரத்து அமைச்சர் அவர்களால் உறுதியளிக்கப்பட்டிருந்தும் நடைமுறையில் இந்த உறுதிமொழி மீறப்பட்டு வருகின்றது.

சிங்கள ஊழியர்களுக்கு சிங்களமும் தமிழ் ஊழியருக்கு ஆங்கிலமும் என்ற நிலைமை மாறி எல்லோருக்கும் சிங்களம் என்ற கொள்கையை கூட்டுத்தாபனம் கடைப்பிடிக்கின்றது. இறைவரித்திணைக்களத்துக்கு உரிய பாரங்களை தமிழில் நிரப்பி கொடுக்கப்பட்ட பொழுது அதை நிர்வாகம் ஏற்க மறுத்த காரணத்தினுல் அப்பாரங்கள் பதிவுதபாலில் அனுப்பிவைக்க வேண்டி நிர்ப்பந்தம் தமிழ் ஊழியருக்கு அண்மையில் ஏற்பட்டது.

இக்கூட்டுத் தாபனத்தின் மொழிக் கொள்கை பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 117ஐ மீறுவதாக உள்ளது. இச்சுற்றறிக்கையில் எல்லாவித பாரங்கள் சுற்றறிக்கைகள் அறிவித்தல்கள் முதலியன எல்லாம் தமிழிலும் மொழிபெயர்த்து கொடுக்கப்படவேண்டும் என்று தெளிவாக்கப் பட்டிருக்கின்றது.

—3 ம் பக்கம் பார்க்க

# சுதந்திர தமிழ் அரசு வைத்து நாடாண்டோம்

## பொதுநல அரசு மாநாட்டில் நவரத்தினம்

—1-ம் பக்கத்தொடர்

சில வருடங்களுக்கு முன்பு வரை கிழக்குப் பாகிஸ்தான் என்றழைக்கப்பட்டு வந்த பிரதேசத்தில் ஏற்பட்ட கலவரங்கள் எமது பகுதியின் அமைதியை எப்படிப் பாழ்படுத்தியது என்பதை அண்மையில் கண்டோம். தற்பொழுது உலகின் இன்னுமொரு பகுதியில்—மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் சைப்பிரஸ் என்னும் தீவில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

சைப்பிரசில் வாழ்ந்து வரும் இரண்டு இனங்களுக்கிடையில் தோன்றிய உள்ளூர் பிரச்சினை என்று சிலர் சொல்லவிருப்பப்படும் பிரச்சினை அந்தப் பகுதியில் கடுமையான நெருக்கடியை உண்டாக்கி அமைதியைக் குலைத்துவிட்டிருக்கின்றது. அங்கு மீண்டும் ஆயுதப் போர் கிளம்பாது என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாதபடி இருக்கின்றது.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு கிழக்குப் பாக்கிஸ்தானில் வாழும் வங்காள மக்கள் தமது மொழிக்கு உரிமை கேட்டுக் கிளர்ச்சி செய்தபோது உலக நாடுகளும், பொதுநல அரசு நாடுகளும், ஏன், அயல் நாடுகளும்கூட அதைப்பற்றி எதுவித அக்கறையும் காட்டாமல் இருந்தன. அது பாக்கிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினை என்றும் மற்றவர்களுக்கு அதில் அக்கறை இருக்கத்தேவை இல்லை என்றும் கருதப்பட்டது. ஆதலால் அதில் ஒரு சமரசமான முடிவு ஏற்படவில்லை. கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றது. கடைசியில் வங்காள மக்கள் பிராந்திய சுயாட்சி கேட்கலாயினர்.

அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிய வங்காள மக்கள் மீது பாக்கிஸ்தான் அரசாங்கம் அடக்கு முறைகளைப் பாவித்தது. பாக்கிஸ்தானுடன் நல்லுறவு வைத்திருந்த நாடுகள் கூட நண்பர்கள் என்ற முறையில் தானும் அதற்குப் புத்திமதி சொல்லும் அளவுக்கு அப்பிரச்சினையில் கவனம் எடுக்கவில்லை. ஒரு நாட்டின் உள்ளூர்ப் பிரச்சினையில் தலையிடக் கூடாது என்ற இந்தக் கொள்கை அவர்களை அப்படி ஒதுங்கி இருக்கச் செய்திருந்தது.

அதிகாரத்திலிருந்தவர்கள் மக்களுக்கு நீதி வழங்க மறுத்ததினாலும் ஆட்சியாளரின் செருக்கினாலும் வங்காள மக்கள் வேறு வழியின்றி சுதந்திரமான வங்காள தேசத்தைப் பிரகடனஞ் செய்தனர். இதனால் அண்மைக் கால வரலாற்றில் நாம் கண்டிராத கொடிய ஆட்சி தலைவிரித்தாடியதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். கிழக்குப் பாக்கிஸ்தானில் பாக்கிஸ்தானின் இராணுவ ஆட்சி நடத்திய இலட்சக்கணக்கான மக்களின் படுகொலையும் நாட்டின் சூறையாடலும் உலகத்தின் மனச்சாட்சியை அதிர்ச்சியடையச் செய்திருந்த போதிலும்கூட இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்று கூறி அது ஒதுங்கியிருந்து கொண்டது.

உள்ளூர்ப் பிரச்சினைஎன்று சொல்லப்பட்ட இந்தப் பிரச்சினை கடைசியில் இந்தியாவுக்கும் மேற்குப் பாக்கிஸ்தானுக்குமிடையில் ஆயுதப் போரில் முடிந்து இந்தப் பகுதி முழுவதின் பாதுகாப்புக்கே ஆபத்து ஏற்படக் கூடிய அளவுக்கு சென்றிருந்தது.

நல்ல வேளையாக, ஆம் மிகவும் நல்ல வேளையாகத் தான், பாகிஸ்தானின் படைகள் இந்தியாவிடம் சரணுகதியடைந்ததின் மூலம் இந்த ஆபத்து நீங்கியது. வங்காளதேசமும் ஒரு தனி நாடாகப் பிறந்தது. ஆனால் இங்கு நாம் சிந்திக்க வேண்டிய முக்கிய கேள்வி என்னவென்றால் கிழக்குப்பாக்கிஸ்தான் இவ்வளவு உயிர்களை, திரும்பிப்பெற முடியாத பல லட்சம் உயிர்களை, பலி கொடுத்துப் பெற்ற சுதந்திரமும் சுயாட்சியும் அவற்றுக்கு ஈடாகுமா என்பதே.

இந்த உலகமும், குறிப்பாக பொது நலவரசு நாடுகளும், கிழக்குப் பாக்கிஸ்தான் வங்காளமங்களுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையில் ஏற்பட்டிருந்த முரண்பாட்டைக் கண்டும் காணுததுபோல் இருந்திருக்காமல், இந்த உலகமும் பொது நலவரசு நாடுகளும் உள்நாட்டுப் பிரச்சினை என்று சொல்லப்படுகின்ற இந்தப் பிரச்சினையின் பாரதூரத்தைக் கவனத்துக்குஎடுத்திருந்து அதற்கு ஒரு முடிவு காண்பதற்கு வேண்டிய கரிசனை காண்பித்திருந்தால் பாக்கிஸ்தானில் ஏற்பட்ட அதி பயங்கரமான பேரிடி நடைபெருமல் தடுத்திருக்கலாம்.

பெருமான்களே! பெருமாட்டிகளே! இன்று நாம் கலந்துரையாடும் விடயத்தில் இந்த அம்சத்தை நான் குறிப்பிடுவதற்கு எனக்கு ஒரு தனிக்காரணமிருக்கின்றது. பாக்கிஸ்தானிலே நடந்தது பொதுநலவரசு நாடுகளில் எந்த ஒரு நாட்டிலாவது நடக்கக் கூடாது என்பதே எனது பக்தி சிரத்தையான பிரார்த்தனையாகும். அதுவும் எங்களுடைய நாட்டில் அப்படி நடக்கக் கூடாது என்பதே எல்லாவற்றிலும் மேலான எனது பிரார்த்தனையாகும். அப்படியான ஆபத்திலிருந்து எம் நாட்டை ஆண்டவன் காப்பாற்றுவனுக! மற்றவர்கள் எங்களுடைய உள்நாட்டுப் பிரச்சினை என்று சொல்லக்கூடிய இந்த அம்சத்தை சாதாரணமாக நான் இங்கு பேச எடுத்திருக்கமாட்டேன். நான் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் எனது இன மக்களிடம் ஊறிப்போய்க்கிடக்கும் மனக் குறைகளை எடுத்துக் கூறுவதற்கு இந்தச் சபையைப் பாவிக்கவேண்டுமென்பது எனது நோக்கம் அல்ல என்பதை நிச்சமாகச் சொல்லுகின்றேன்.

தமிழர் கூட்டணியின் நோக்கத்தை எடுத்துக்கூறி அதற்கு ஆதரவு தேடுவதுமல்ல எனது நோக்கம். நான முன்பு எடுத்துச் சொன்னது போல, நாம் வரலாறு காட்டும் கசப்பான பாடங்களிலிருந்து பயனடைய வேண்டும்.

அன்று கிழக்குப் பாக்கிஸ்தானில் நடைபெற்ற அதி பயங்கரமான பேரிடியும் இன்றுமத்தியதரைக்கடலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆயுதப் போரும் உள்நாட்டுப் பிரச்சினை என்று ஒருவர் சொல்லக்கூடிய இந்தப் பிரச்சினையில் எமது கண்களைத் திறக்கவேண்டும். அது நடைபெற்ருல்தான் இந்தப் பொது நலவரசு நாடுகள் என்ற இப் பெரிய குடும்பத்தின் அங்கத்தவர்கள் என்ற முறையில் நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய பிரச்சினைகளை கண்டும் உணர்ந்தும் கொள்ளலாம்.

இலங்கை பல நூற்றுண்டுகளாக அந்நிய ஆட்சிக்கு உட்பட்டுக்கிடந்தது. இலங்கையை அந்நியர்கைப்பற்றுவதற்கு முன்பு நம்முடைய இந்தச் சிறு தீவில் தன்னுதிக்கமும் சுதந்திரமுடைய மூன்று இராட்சியங்கள் இருந்தன. அவை ஒன்றுடன் ஒன்று சமாதானமான முறையில் நடந்துகொண்டிருந்தன. யுத்தகளத்திலே நாம் எமது சுதந்திரத்தைப் போர்த்துக்கீசரிடம் பறிகொடுத்தோம். போர்த்துக்கீசரிடமிருந்து எமது நாட்டை ஒல்லாந்தரும் ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயரும் எமது நாட்டைக் கைப்பற்றி ஆண்டனர். இந்த அந்நியர் இந்த நாட்டிலிருந்த மூன்று இராச்சியங்களையும் நிர்வாக வசதிக்காக ஒன்ருக இணைந்து ஆண்டுவந்தனர். 1948ம் ஆண்டு ஆங்கிலேயர் எமது நாட்டை விட்டு அகன்ற பின்பு நாங்கள் ஒரு நாட்டினராகவே தொடர்ந்து இருந்து வருகிருேம்.

தமிழர் கூட்டணியிலுள்ள நாம் இந்நாட்டில் தொடர்ந்தும் ஒரு நாட்டினராக இருப்பதையே விரும்புவோம். ஆனால் இந்த நாட்டில் வாழும் எல்லா மக்களுக்கும் சம அந்தஸ்துடனும், சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அரசியல் சட்டத்தின் மூலம் உத்திரவாதம் அளிக்கும் அடிப்படையிலும்தான் நாம் அதை விரும்புவோம்.

ஆனால் துரதிர்ஷ்ட வசமாக மொழிப் பிரச்சினையும் ஏனைய பிரச்சினைகளும் தொடர்ந்து இருந்துகொண்டேயிருக்கின்றன.

முன்னாள் கிழக்குப் பாக்கிஸ்தானிலும், சைபிரஸிலும் நடந்த பயங்கரநிலைமை இங்கு உருவெடுப்பதற்கு தமிழர் கூட்டணி இடமளிக்காது. ஆனால் வருளம் எமது இளம் சந்ததியினர் நாம் கடைப்பிடிக்கும் அதே அகிம்சையைக் கடைப்பிடிப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அதனால் எமது நாட்டிற்கும் சமூகத்திற்கும் பாரதூரமான நாசத்தை ஏற்படுத்த முடியும். அவசரகாலச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இரும்பு அல்லது மூங்கில் திரை போடப்பட்டிருக்கிறது. இளைஞர்களை வழக்கு விசாரணையின்றி தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைப்பதனால் பிரச்சினைகளை தீர்த்துவிட முடியாது.

ஆகவே, பெருமாட்டிகளே! பெருமான்களே! உள் நாட்டுப் பிரச்சினைகள் வளர்ந்தோ வெடித்தோ பொதுநலவரசுப் பிரதேசங்களில் குழப்பங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு சில அங்கத்துவ நாடுகளிலிருக்கும் பிரச்சினைகளின் பாரதூரமான தன்மையை அறிந்து உணர்ந்து கொள்ளும்படி இங்கு கூடியிருக்கும் கௌரவ அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

---

# வன்னியர் ஒரு மாம்பழம்-

# கொழும்பானல்ல, செம்பாட்டான்

கொழும்பு மாநகரில், பிரபலங்களின் குடும்பத்திலே பிறப்பும், கறுவாக்காட்டு மண்ணிலே வளர்ப்பும், கனதனவான்களுடன் இனம்கனமான பள்ளியிலே 'இங்கிலீசுப்' படிப்பும், இன்னேரன்ன வேறு இலட்சணங்களும் காலம் காலமாகத் தமிழ்த் தலைமையணியை உருவாக்கிக் கொண்டிருந்தன. அவ்வேளையிலே, அமரர் வன்னியசிங்கத்தின் வருகை அந்தப் போலிமயக்கங்களையெல்லாம் பிடுங்கியெறிந்துவிட்டு தலைமையணியின் அமைப்பிலே ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.

அவர்கொட்டு முரசுடன் கொடிகட்டியாண்ட பரம்பரையில் பட்டத்து இளவரசராகப் பிறக்கவில்லை, சாதாரண குடியிலேதான் ஜனித்தார்; கொல்லங்கலட்டியின் செம்பாட்டு மண்ணிலேதான் வளர்ந்தார்; 'கண்டது கடியதுகளுடன்' எடுப்பும் விருப்புமில்லாத 'ஏனேதானே' பள்ளியிலேதான் படித்தார். தந்தை செல்வா தமிழ்த் தலைமை வரலாற்றின் போலி வழக்கங்களை நிராகரித்துவிட்டு அமரர் வன்னியருக்குத் தலைமைத் தவிசைத் தந்தார். தந்தை அவர்கள் செய்ததிலே வியப்பில்லை. காரணம் அசல் நாட்டு மண்ணிலே நாற்று வைக்கப்பட்டவர்தானே அவரும்.

தந்தையவர்கள் வேர்விட்டது கொழும்பிலாயினும், விதை போட்டது செம்பாட்டு மண்ணில்லவா? விழுது விழுந்தது தமிழ் மாநில மெங்கணுமல்லவா? உரிமையோ உரிமையென்று சுதந்திரப் பசியினால் கூப்பாடுபோட்ட தமிழனுக்கு தன் சேவையை பழத்தசையாக்கிச் சாப்பாடுபோட்டவர் அமரர் வன்னியர். தமிழ் மகனுக்கு ஊட்டமும் சுதந்திரத்தில் நாட்டமும் தந்த தன்மையினால் அன்னர் செம்பாட்டு மாம்பழமாவார்.

### பலாப்பழம்

கடுமையான தொனி. கட்டுப்பாடானபேச்சு. கண்டிப்பான போக்கு. இவைதாம்

கரிகாலன்

அன்னரின் முதன்முகத்தோற்றம். எவரையும் முதலில் சற்றே மலைக்கவைக்கும் தன்மையனதாம். அந்தப்பலாப்பழத்தின் முட்கள் படர்ந்த தோலையும் தடித்த தண்டையும் கடுத்த தடலையும் நீக்கிவிட்டு உள்ளே பலாச்சுளையைச் சுவைத்தால்பிறக்கின்ற இன்பத்திற்குப்பேரின்பம் ஈடாகுமோ? அமரரின் நெஞ்சத்திற்கு அண்மையிலே கொஞ்சம் நெருங்கிவிட்டாலோ வாய் நிறையப் பேசுகிருர். காதுக்கும் விருந்துண்டு; அதற்கு மேலாக, கருத்துக்கும் விருந்துண்டு. செவிக் கூட்டிய விருந்துசெவ்வியது. அதனால் சிந்தைக்கூட்டிய விருந்து திவ்வியமானது.

### வாழைப்பழம்:

வன்னியசிங்கம் என்ற வாழைப்பழத்தின் சேவையை முழுமையாகத் தமிழினம் விழுங்கிற்று. தோலை உரித்து அன்னரின் தொண்டென்றும் பழத்தசையை நேரடியாகவே தொண்டைக்குள் போட்டுக் கொண்டது. அங்கு கொறிப்பதற்கோ அல்லது கடிப்பதற்கோ அவசியமில்லை. கடிப்பதற்குக் கொட்டையுமில்லை; சலிப்பதற்குச் சக்கையுமில்லை. எறியப்பட வேண்டிய பகுதி அதன் தோல் மட்டுமே. அது எதிரிகளுக்கானது. அதில் வழுக்கி விழுந்தோரெல்லாம் வாழ்க்கையிலே வழுக்கிவிழுந்த வாய்மை கெட்டோரே.

### முக்கனி:

முக்கனியாம் வன்னியரின் தொண்டினை மாந்தி மகிழ்ந்தது தமிழினம். அன்னரை எமது கைகளிலேயிருந்து காலன் கவர்ந்து இன்றுடன் பதினைந்து ஆண்டுகள் கழிகின்றன. வன்னியர் சென்றுவிட்ட திக்கை நோக்கி வீர வணக்கம் செலுத்துவோம். விரக்திகள் விடுதலையைச் சாதித்ததில்லை, வெற்றியைப் படைத்ததில்லை. துஞ்சாத வீரனொருவனின் ஆன்மா துருவ நட்சத்திரமாகி எமக்கு வழிகாட்டுகிறது என்ற நம்பிக்கையுடன் சுதந்திரபுரியை நோக்கித் தமிழினம் ஒட்டமும் நடையுமாக முன்னேறிடும்!

---

### சிங்களத் திணிப்பு...

—2-ம் பக்கத் தொடர்

இக்கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்களில் 40% மாகேனர் தமிழ் பேசும் ஊழியர்கள் திருகோணமலை கிளையை பொறுத்த மட்டில் 100க்கு 95% தமிழ் ஊழியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டுத்தாபனத்தில் ஒரு தமிழ் மொழி பெயர்ப்பாளரோ அன்றி ஒரு தமிழ் தட்டச்சுபொறியோ இல்லையென்பதும் அவற்றிற்கு ஏற்பாடு செய்வதில்லையென்பதிலும் நிர்வாகம் பிடிவாதம் காட்டுவதாக தெரிகின்றது. புதிய ஊழியர் தெரிவிலும் தமிழர் புறக்கணிப்பு நடைபெறுகின்றது.

---

## சொல் அம்பு

திரு. வாசுதேவ நாணயக்காரா:- "இப்போது நாட்டில் சமூகப்புரட்சி ஒன்று நடத்து வருகிறது என்பதை மறந்துவிடவேண்டாம்"

திரு. எஸ். கதிரவேற்பிள்ளை:- "உமது புரட்சியை நீர் பேரவைக்கு வெளியில் வைத்துக்கொள்ளும்"

ஃ ஃ

சபாநாயகர்:- நீதிமன்றங்கள் இப்பேரவை எந்த நோக்கத்துடன் ஒரு சட்டத்தை இயற்றியது என்பதை புரிந்து கொண்டே, சட்டத்திற்கு வியாக்கியானம் அளித்துத் தீர்ப்பளிக்க வேண்டும்.

திரு. கதிரவேற்பிள்ளை:- அப்படியானல் நீதிபதிகளுக்கு அருகில் எங்களில் ஒருவர் அமர்த்து, எமது கருத்து என்னவென்பதை சதா காலமும் காதில் ஓதிக் கொண்டே இருக்கவேண்டிவரும்!

# காவியத் தலைவன் அறிஞர் அண்ணா



**இன விடுதலைக்காக தம் வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள் மாண்டு மடிந்தாலும் அவர் தீட்டிய தியாக காவியங்கள் காலமெல்லாம் ரீங்காரம் இசைத்துக் கொண்டே இருக்கும்.**

தமிழர் தம் வளமான வாழ்வுக்கு வித்தாகக் கிடைத்த முத்தான சொத்து அறிஞர் அண்ணா என்பதை தமிழ் கூறும் நல்லுலகும் நாகரிகமான அரசியல் வாதிகளும் ஏற்றுக்கொள்வார்கள்.

பூத்துக்குலுங்கும் பொலிவுடனும் எழிலுடனும் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருந்த திராவிட இனம் ஆரியர்களின் கெடுபிடியால் தத்தளித்துக் கொண்டிருந்த வேளை அண்ணா அவர்கள் பிறந்தார். பச்சையப்பன் கல்லூரியில் கல்விகற்றார். பட்டதாரியானார்.

தமிழர்களின் தொன்மையையும், சரித்திரத்தையும் இலக்கியவாயிலாகவும் வரலாற்றுரீதியாகவும் ஆராய்ந்தறிந்த அண்ணா அவர்கள்—தமிழினம் ஏன் தாழ்ந்தது என சிந்தித்தார். சீர்திருத்த வாதியாக மாறினார்.

அறியாமை இருள் அகற்றப்பட வேண்டும்—தமிழர் வாழ்வில் விடிவு மலர வேண்டும் என்ற முடிவுடன் தம்மைப் பொதுப் பணிக்கு அர்ப்பணித்தார்.

தமிழ்மொழியின் சிறப்பையும் வனப்பையும் கலை கலாசார பாரம்பரியங்களையும் பாமர மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் மிக அழகுற எடுத்தியம்பி—தூங்கிக்கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி—மொழி உணர்ச்சியை இன எழுச்சியை ஏற்படுத்தி வைத்த பெருமை பேரறிஞர் அண்ணாவுக்கே உரியதாகும்.

## பகுத்தறிவாளர்

தமிழ்ச் சமுதாயத்தின் மத்தியில் சாபக்கேடாகக் கிடக்கும் மூடக் கொள்கைகளை—சாதி மத வேறுபாடுகளை—அறியாமையின் காரணத்தால் தமது வாழ்வைத் தாமே அழித்துக் கொள்ளும் மந்த மதி படைத்தவர்களின் பரிதாப நிலையைப் பார்த்து அண்ணா வேதனைப் பட்டார். தீண்டாமைக் கெதிராக அண்ணா நிகழ்த்திய பிரசங்கங்கள் பிரசித்தி பெற்றவை. மனித உரிமையை மறுக்கும் அநீதியை கண்டித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வைத்தார்.

சீர்திருத்த வாதியாகிய அண்ணா தாழ்த்தப் பட்ட மக்களுக்காக ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அருந்தொண்டாற்றினார். சமுதாயத்தில் பின்தங்கிய வர்க்கத்தினராக வாழ்ந்துகொண்டிருந்த வக்கற்றவர்களுக்கு கை கொடுத்து உதவினார்.

பகுத்தறிவுக் கருத்துக்களை, பண்பாட்டுக் கொள்கைகளை — இப்படித்தான் வாழவேண்டும்என்ற சிறந்த அரசியல் சித்தாந்தத்தை தனது பேச்சு வன்மையால், எழுத்து வனப்பால் வளர்த்து வந்தார்.

அண்ணா பணம் சேர்க்க விரும்பவில்லை. தன் வாழ்வைப்பற்றி எண்ணவில்லை.

**வீ. எம். குமார்**
அரியாலை

அடிமைப்பட்ட தமிழ் மக்களின் விடுதலைக்காக—ஏழை மக்களுக்காக கடைசிவரை போராடினார்.

உலகில் வாழும் தமிழர்களை எல்லாம் தமது இனிமையான தமிழ்ச்சொல்லாட்சியால் —தமிழ் உணர்வால் ஒன்றுபடுத்தினார். ஒன்றுசேர்க்க முடியாத ஒற்றுமையை, பிணைப்பை, அன்பை, பாசத்தை எல்லோர் மத்தியிலும் ஒரே நேரத்தில் வளர்த்த சிறப்பு அண்ணாயுகத்தில் நடந்ததன்றோ.

## பொதுநலவாதி

அரியாசனத்தில் கொலுவிருந்து ஆட்சிபுரிந்த கன்னித் தமிழ் சிறுமதி படைத்தவர்களால் சீரழிக்கப்பட்டு —நாதியற்ற மொழியாக நலிவிழந்த மொழியாக — வனப்பிழந்த மொழியாக —வாழ்விழந்த மொழியாக அடக்கி ஒடுக்கி ஆளப்படும் அநீதியைக் கண்டு பொங்கி எழுந்தார் அண்ணா!

இன்பத் தமிழின் துயர் துடைக்க தன்வாழ்வையே அர்ப்பணித்து முழுநேர அரசியல் வாதியாக தன்னை ஆக்கிக்கொண்டார்.

"பகுத்தறிவால் பண்படாத உள்ளத்தில் எந்த நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது" என்று கூறி அறியாமையை விரட்டியடித்து பகுத்தறிவு வாதிகளை உருவாக்குவதற்காகப் பாடுபட்டார் அண்ணா. ஆனால்,

இன்று தமிழ் நாட்டில் நடைபெறும் விபரீதமான அரசியல் அந்தகார நிலையையும்; ஈழத் தமிழ் நாட்டின் அரசியல் வாழ்வில் இடம் பெற்றிருக்கும்— எங்கிருந்தோ வந்தவர்கள்—இடையில் நுழைந்தவர்கள் எல்லாம் தூய்மையான கன்னித் தமிழை களங்கப் படுத்தி தம் இச்சைகளைப் பூர்த்தி செய்து மகிழும் இழி செயலை — அநாகரிகமான அரசியல் விபச்சாரத்தைக் கண்டு அண்ணாவின் ஆத்மா இரத்தக் கண்ணீர் வடிக்கிறது.

தனது தம்பிமார் பகுத்தறிவாளர்களாக — பண்பட்ட அரசியல் வாதிகளாக வாழவேண்டும் என ஆசைப் பட்டார். மனிதகுலம் மாண்புடன் வாழவேண்டும்—சுதந்திர இனமாகவாழவேண்டும் என்ற பொதுநல எண்ணத்தை மனதில்கொண்டு கன்னித்தமிழின் அடிமை விலங்கொடிக்கப் படவேண்டும் என்பதையே தன் கடமையாக கருதிப்போராடி அதில் வெற்றியும்கண்டார்.

## பண்பட்ட உள்ளம்

ஆட்சியாளரின் குறைகளை எடுத்துரைத்த அண்ணா — பகைவரைச் சாடுகின்ற முறையில் கூடப் பண்பாட்டை வளர்த்தார். தனிப்பட்ட ஒரு மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கு அண்ணா இலக்கணமாக விளங்கினார்.

அவரது கொள்கையைப் பின்பற்றி அவர் காட்டிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற சீரிய பாதையில் நம்மை நாம் வழி நடத்திச் செல்வதே நாம் அவருக்குச் செய்யும் சிறந்ததொண்டாக அமையும்.

அறிஞர் அண்ணா எண்ணற்ற மக்களால் மதிக்கப் படுவதற்குக் காரணம், அவரது உயர்ந்த பண்பும், சமத்துவ மனப்பான்மையும், தியாக உணர்ச்சியும், சீர்திருத்தச் செயல்களுமேயாகும்.

கதைகளின் மூலம் சிறந்த கருத்துக்களை தரமான சொற்களை அழகாக அமைத்து புதிய படைப்புக்களை அரங்கேற்றிவைத்தார். அரசியல் வாதியாக, பேச்சாளராக, கதாசிரியராக இலக்கிய கர்த்தாவாக, நடிகராக—பல பாத்திரங்களைத் தாங்கி, தனது திறமையால் தமிழினத்துக்குப் பெருமையைத்தேடித்தந்தார்.

அண்ணாவின் சாதனைகள் தமிழர் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய வீரகாவியங்களே!

தமிழ் கூறும் நல்லுலகின் காவியத் தலைவனாகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் அறிஞர் அண்ணா வாழ்ந்து கொண்டே இருப்பார்.

இன விடுதலைக்காக தம் வாழ்வை அர்ப்பணித்துவாழ்ந்தவர்கள் மாண்டு மடிந்தாலும் அவர் தீட்டிய தியாக காவியங்கள் காலம் எல்லாம் ரீங்காரம் இசைத்துக்கொண்டே இருக்கும்!

## "மூன்றெழுத்து காவியம்"

மூன்றெழுத்திலே அண்ணன்
மூழ்கிக் கிடக்கின்றார்
அன்னை தமிழ்மொழியை
அரசாண்டோர் மூவேந்தர்
மூவேந்தர் கண்டதுவும்
முக்கொடிதான் எம்
நாவேந்தன் அண்ணா கண்ட
நல்லறவழிகளே மூன்று
கடமை கண்ணியம் கட்டுப்பாடு

கையசைந்தால் ஒருநொடியில்
கானகமும் தேனகமாய் மாறிவிடும்
கண்ணசைந்தால் இந்த
விண்ணே அசையும்
நாவசைந்தால் இந்த
நாடே அவன் வசம்
பல்லிலே காவி அதுவோ
பல காவியங்களின் முத்திரை.

—ந. துரைராசா
திருகோணமலை.

## அண்ணாவை - வன்னியரை எண்ணுகினும்....

"வன்னியூர்க் கவிராயர்"

பாராண்ட வல்லதமிழ் பண்பாடும் ஈழமண்ணில்
ஊராள் மொழியாய் உயர்வுபெறச்—சோராது
வாழ்வினையே அர்ப்பணித்த வன்னியரை எண்ணுகினும்
வாழ்வினிலுண் டாமே வளம்!

ஆழ்ந்தஇனப் பற்றுளராய் அஞ்சாராய்ச் சூழ்ச்சிகளால்
வீழ்ந்த சுதந்திரத்தை மீட்பதற்கு—நாள்தோறும்
வாழ்வினையே அர்ப்பணித்த வன்னியரை எண்ணுகினும்
வாழ்வினிலுண் டாமே வளம்!

தென்னாட்டிற் தோன்றி சிறந்த தமிழ்ச் சேவையினால்
என்நாட் டவர்க்குமுரித் தான அண்ணா—தன்னை
மறவாத நாளெல்லாம் வண்டமிழ்ப்பற் றுள்ள
[illegible]

# வன்னியரை மறந்த தமிழனுக்கும் வாழ்வு உண்டோ?

மூச்சுள்ள மூத்த தமிழ் மைந்தனுக விளங்கி மூவர்ணக்கொடி தாங்கி "தமிழ் அரசு" கோரி முழக்கமிட்டவர் வன்னியசிங்கம் அவர்கள். சொல்ஒத்த செயலாற்றிய செம்மலாக விளங்கிய இவர் செல்வாவின் வாய்ச்சொல்லைமீருத தொண்டனுகவும் துலங்கினுர். இவர் வாழ்விற் கண்ட வருமானம், தமிழ் மானமேயன்றி வேறு எவ் வருமானத்தையும் கண்டதில்லை. ஆகவே அவர்கள் குடும்பத்திற்கு விட்டுச் சென்ற முதுசொத்தும் தன் மானம் ஒன்றேயாகும்.

தன்மானத்தின் திருவுருவாய் விளங்கிய வன்னியர், மாறுபட்ட பலரோடு நட்போடு பழகியபோதும் கொள்கைக் குன்றுகவே விளங்கினுர். தனக்கு சரியெனப்பட்ட கொள்கையை அவர் என்றும் எவருக்கும் விட்டுக்கொடுத்ததில்லை. இப்பண்பு இவரின் பள்ளி வாழ்க்கையிலும் பல்கலைக் கழகவாழ்க்கையிலும் ஊறிக்கிடந்த பண்பு, என்ற இவருடன் பயின்ற மாணவர்கள் கூறுவர். இவர் தன் வாழ்க்கையில் தன் கொள்கைக்காகப்பட்ட துயர்கள் ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் என்று கூறலாம்.

சுடச்சுடஒளிவிடும் பொன் போல் துன்பங்கள் படப்பட இவர் வாழ்வில் தூய்மையும் துணிவும் மேலோங்கி ஒளி வீசின. இவரின் உள்ளத்துணர்வுகளை நன்கு ஊடுருவி உணர்ந்துள்ள நம் உணர்ச்சிக் கவிஞன் காசி ஆனந்தன் அவர்கள் "சிறைகொண்டு வைத்தாலும் எனது வாழ்வு செத்தாலும் பட்டாலும் சிதறினுலும் குறிகொண்டு சுட்டாலும் ஈழநாட்டில் குடிவென்று தமிழனை வாழச்செய்வேன்! அறிவின்றி வாட்டாதீர் — தமிழர் கூட்டம் ஆடல்ல மாடல்ல தெரிவீர்! என்று வெறிகொண்டு போரிட்ட மறவன் மேனி வீழ்ந்தாலும் புகழுக்கு வீழ்வுண்டாமோ" என்ற தன் பாடல் வாயிலாக வன்னியரின் திடம்கொண்ட நெஞ்சினை திறம்பட படம் பிடித்துக் காட்டுகிருர்.

## அரசியல் ஞானம்

வன்னியரின் புகழுக்கு வரம்பு கட்டி அவரின் புகழ் இந்தஇந்தத் துறையில் தான் துலங்கியது என்று கூறுவது அவரின் பல்துறைப் பாங்கினை அறியாதார் கூற்றேயாகும். அவரின் தமிழ் அறிவு ஆங்கில அறிவு, சட்ட அறிவு, சமய அறிவு, ஏற்றமிக்க எழுத்தாற்றல், கூரிய சொற்கொண்டு நகைச்சுவையோடு கிண்டலும் கலந்து எதிரிகளை அவர் தாக்கி தமிழ் இனத்தின் ஏற்றத்திற்காக அவர் பட்ட பாட்டினை எல்லாம் யாம் எளிதில் மறக்கமுடியாது. வினுவிற்கு விடை, கேள்விக்குப் பதில் என்ற துறையை பொதுக் கூட்டங்களில் ஒரு கலையாக வளர்த்து தமிழ்ப் பொது மக்களுக்கு அரசியல் ஞானத்தை ஊட்டிய அவர் சுடச்சுட அளித்த பதில்கள் வாயிலால் எதிரிகள் பலரை தலைகுனியவும் செய்தார்.

தமிழ்த் தலைவர்கள் பலர் தாம்பெற்ற சட்ட அறிவு கொண்டு தமிழ் இனத்தை மட்டம் தட்ட முயன்ற போது அவர்களைத் தட்டிக் கேட்டு அவர்கள் இருக்க

**ஈழவேந்தன்**

வேண்டிய இடத்தில் இருக்கச் செய்த பெருமையும் இவரைச்சாரும். தான் பெற்ற அறிவையும் ஆற்றலையும்கொண்டு தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று சீரோடு சிறப்போடு அவர் வாழ்ந்திருக்கலாம்.

## தன்னலம் கருதாமை

இத்தகைய சுகவாழ்வை அவர் நாடியிருந்தால் அவர் இன்னும் உயிரோடு வாழும் வாய்ப்பையும்பெற்றிருக்கக் கூடும்ஆனுல் நாயினும்கீழாய் நம் தமிழ் மக்கள் நலிவதைக் கண்ட அவர் அப்படி வாழ விரும்பவில்லை. மாறுகத் தமிழர் நலமே தன் நலமேன வாழ்ந்த அவர் தன் உயிரையே பணயம் வைத்து ஓயாது உழைத்தார். இதன் முடிவு வயது நாற்பத்தெட்டுடன் அவர் வாழ்வும் முற்றுப்பெற்றது. இவ்விதம் பல் துறையில் வன்னியரின் புகழ் பரவியிருந்த திறுற்தான் வன்னியரின் புகழுக்கு வரம்பு கட்டுதல் கடினம் என்று கூறும் நம் உணர்ச்சிக் கவிஞர் "அன்னைக்கு உயிர் தந்து செத்தமேதை அஞ்சாத சிங்கத்தை அளந்த கோடிப் பண்ணுலும் கவியாலும் பாடினுலும் பகலுக்கு விளக்கிட்ட கதையே அன்றே" என்று தன் ஆற்றுமையை உள்ளம் உருக்கும் முறையில் எடுத்துரைக்கிருர். இதே கவிஞர் மற்றுமோர் இடத்தில் வன்னியரின் சிருக்கு வரம்பில்லை ஆகவேதான் வாயில்லாப்பூச்சிகளும் அவரைப் பாடும்" என்று ஏற்றமுற எடுத்துரைத்தும் நிறைவு காணுத நிலையில் "அன்னுரைப் போற்றுத தமிழனுக்கும் அடுப்பேனும் கொள்ளிக்கும் உணர்வே இல்லை" என்று இடித்துரைக்கும் போது எம் நெஞ்சம்வேதனையால் வெம்முகிறது. காரணம் வன்னியரை நாம் போற்ற வேண்டியளவிற்கு போற்றி அவர் காட்டிய வழியில் நாம் செல்லத்தறிவிட்டோம் என்பதினுலேயாகும்.

"செய்யவேண்டிய பணிகளோ மிகவும் ஏராளம். செய்து முடிக்கப்பட்டவையோ மிகவும் சொற்பம். நானே நீங்களோ எப்படி டாக்டர் ஓய்வெடுக்கமுடியும்? நாங்கள் ஓய்வெடுக்க வேண்டுமென்பது இறைவனின் சித்தமானுல் அவர் எங்களது கடமையில் ஒரு பகுதியைத் தாங்கும் பொருட்டு உண்மை ஊழியர்களான இளைஞர்களை எங்கள் மத்தியில் அனுப்புவார். அங்ஙனமன்றி நாங்கள் இவற்றைத் தாங்கித்தான் தீரவேண்டும் என்பது இறைவனின் சித்தமாயின், இலட்சியப் பணியின் சுமையால் நாம் நொடிந்து போவதும் இறைவனின் சித்தமே" மேற்குறித்த நெஞ்சம் நெகிழ்ந்துருகும் சொற்களை வன்னியர் தான் மறைவதற்கு சில நாட்களுக்கு முன் டாக்டர் நாகநாதனிடம் கூறினுர். இன்று இவ்விரு பெருந் தலைவர்களும் எம்மிடை இல்லை. "செய்துமுடிந்தவையோ மிகவும் சொற்பம் செய்யவேண்டியவையோ ஏராளம்" என்று 1959லேயே வன்னியர் கூறினுர்.

இன்று நடைபெறுவது 1974ஆம் ஆண்டு. 15 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. 1959 உடன் ஒப்பிடுகையில் இன்று எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஒன்றல்ல நூறல்ல ஓராயிரமாகப் பெருகிவிட்டன. ஆகவே அன்று வன்னியரை எதிர்நோக்கிய பிரச்சினைகளைவிட இன்று எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகள் எம்மை மூழ்கடிக்கும் பிரச்சினைகளாகஇராட்சதஉருவம்பெற்றிருப்பதையும் யாம் உணரல்வேண்டும். யாம்விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் எம்மீது பெரும் சுமை சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த அறைகூவலுக்கு ஈடுகொடுக்கும் முறையில் பயனை எதிர்பாராது செயல் ஆற்றுவதே யாம் அவருக்கு செய்யும் கைமாறுகும். வன்னியரின் வழித்தோன்றல்கள் வன்னியரின் வழி நிற்போர் என்றெல்லாம் நம்மைப்

—7-ம் பக்கம் பார்க்க

## நெஞ்சம் மறக்கவில்லை

—காசி ஆனந்தன்—

தன்னின மொன்றே நோக்காய்த்
 தமிழரசமைந்தபோதில்
முந்நிறக் கொடிபிடித்த
 முதல்வரி லொருவர் எங்கள்
வன்னிய சிங்கம் ஐயா
 வையகம் நீத்தாரென்று
எண்ணவும் நெஞ்ச மில்லை
 எம்மிடம்! என்ன செய்வோம்!!

**காசி ஆனந்தன்**



## கடமை வீரர் வன்னியர்

"சீர் இருந்தென்ன சிறப்பிருந்தென்ன
 சிந்திக்க சொல்ல ஒருவரில்லையே
பார் இருந்தென்ன பயனிருந்தென்ன
 பகுத்தறிவாளன் வன்னியர் இல்லையே
கார் இருந்தென்ன கடலிருந்தென்ன
 கண்ணியவான் இங்கு ஒருவரில்லையே
யார் இருந்தென்ன யாமிருந்தென்ன
 யாகசீலன் வன்னியர் இல்லையே."

"பணமிருந் தென்ன பலமிருந்தென்ன
 பண்பாளர் பாரில் ஒருவரில்லையே
குணமிருந் தென்ன குலமிருந்தென்ன
 கொள்கைவீரர் வன்னியர் இங்கில்லையே
வளமிருந்தென்ன வனப்பிருந்தென்ன
 வழி காட்டி ஒருவரில்லையே
களமிருந் தென்ன கட்டுப்பாடுருந்தென்ன
 கடமைவீரன் அண்ணு வன்னியரில்லையே."

—திருமலைக் கலைமாறன்.

# யாகிகள் என்றும் வாழ்வார்கள்

# சங்கப் பலகை

## கட்டுரை மணிகள்

நூல்: கட்டுரை மணிகள்
தொகுப்பாசிரியர்: புத்தொளி

விலை ரூபா: 2/25.

வெளியீட்டோர்: தமயந்தி பதிப்பகம், அச்சுவேலி.

திருவாளர் புத்தொளி அவர்கள் எழுத்தாளர் மட்டுமன்றி ஓர் ஆசிரியரும் ஆவார். இதுதவிர அவர் ஆசிரியர் சங்கமொன்றின் முக்கிய உறுப்பினரும்கூட. இதனால்தானோ என்னவோ அவர் மாணவர்களை மனதில் கொண்டு—அவர்களது கல்வியைக் கருத்தில் கொண்டு செயலாற்றிவருகிறார்.

கடந்த ஆண்டு மாணவர்களுக்கு மிகுந்த பயனுள்ள 'கட்டுரைக் கதம்ப'த்தை வெளியிட்டவர் இப்பொழுது 'கட்டுரை மணி'களைத் தொகுத்து தந்திருக்கிறார். மாணவர்கள் தங்களது கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள இந்நூல் பெரிதும் உதவக்கூடியது.

'வள்ளுவர் வானுயர் கருத்து', 'காலத்தை வெல்லும் இலக்கியம்', 'மக்கள் ஆட்சி', 'நாவலர் தந்த தமிழ்', 'சிறுகதை', 'நான் விரும்பும் பெரியார்' போன்ற பதினொரு மணியான கட்டுரைகள் இத்தொகுதியில் இடம் பெற்றிருக்கின்றன. செந்தமிழ் மணி. பொ. கிருஷ்ணபிள்ளை பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை, அகிலன், சிற்பி போன்ற அறிஞர்கள் இவைகளை எழுதியுள்ளனர்.

இந்நூலுக்கு 'முகவுரை' வழங்கியிருக்கும் செந்தமிழ் மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் "இந்நூலில் இடம் பெற்றுள்ள பதினொரு கட்டுரைகளும் மணியானவை" என்றும் "பலவகை மனப்போக்குள்ள மாணவருக்கும் உகந்த இத்தகைய கட்டுரைத் தொகுப்பு மெச்ச வேண்டிய தொன்றாகும்" "என்றும் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு பொருள்குறித்து பல்வேறு எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகளைத் திரட்டி ஒரே நூல் வாயிலாகப் படித்துப் பயன்பெற வழிசமைத்த புத்தொளியை நாமும் பாராட்டுகிறோம். மாணவர்களை மனதில் கொண்டுதொகுக்கப்பெற்ற நூலாயினும் 'கட்டுரை மணி'களை மற்றையோரும் படிக்கலாம்.. அகிலனின் சிறுகதை, சிறுகதைகள் எழுத முன்வருவோர் அவசியம் படிக்க வேண்டிய கட்டுரையாகும்.

நூலின் அச்சு வேலைகளிலும், இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

—பொ. ச.

## 'காரை ஒளி'

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாரதியின் பாடலைத் தாங்கி ஆனந்த ஆண்டு மலராக "காரை ஒளி" வெளிவந்துள்ளது.

காரை அபிவிருத்திச் சபையின் தலைவர் வாழ்த்துடன் வெளிவந்துள்ள இம் மலரில் "பனைத்தொழிலின்" பாங்கினை யாழ்ப்பாண விமல் அமரசேகரா எடுத்துரைக்கிறார்.

"மீண்டும் ஒளி" என்ற தலைப்புடன் வெளிவந்துள்ள இக்காரையொளியின் தலையங்கம் காரை நகரில் பொருளியல் வளர்ச்சியை வலியுறுத்துகிறது.

சித்திரை வருடப் பிறப்பு, காரை நகரில் பருத்திச் செய்கை, காரை ...ரில் வளர்த்துவரும் கைத்தொழில், குரக்கன், தனித்தமிழ், பனஞ்சீனி, பெண்களும் சமூகத்தொண்டும், "என் கண்ணோட்டத்தில் நாவலர், திருநாவுக்கரசு நா...ர் போன்ற வெவ்வே... தலைப்புகளில் வெளிவந்துள்ள கட்டுரைகள் இம்மலரில் பல்வகைத் தன்மையினை பாங்குடன் எடுத்துக் கூறுகிறது.

திரு. ஐ. தி. சம்பந்தனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள இம்மலரில் அவரின் தனி முத்திரை பதிந்திருப்பதைக் கண்டு உவகையுறலாம், பயனும் பல பெறலாம்.

விலை: குறிக்கப்படவில்லை.

பெறும் இடம்: காரை அபிவிருத்திச் சபை.

98, விவேகானந்த மேடு, கொழும்பு—13.

## நான் கண்ட நம்பியாரூரன்

நூல்: நான் கண்ட நம்பியாரூரன்.

ஆசிரியர்: ஈழவேந்தன்.

விலை: ரூ 1/00.

கிடைக்குமிடம்: மா. க. கனகேந்திரன், 150, சுபத்திராம வீதி, நுகேகொடை மற்றும் புத்தக் கடைகள் பலவற்றிலும் பெறலாம்.

சுந்தரரின் வாழ்வையும் அவர் ஆற்றிய பணியையும் பற்றி பலர் சுவைபட ஆராய்ந்துள்ளது உண்மை எனினும் நாம் வாழ்கின்ற சூழ்கின்ற நிலையை நினைவில் வைத்து வரலாற்று உணர்வுடன் வளமான நடையில் நம்பியாரூரரின் நயத்தக்க நலம் பலவற்றை ஈழவேந்தன் அவர்கள் தனக்கேயுரிய தனி நடையில் சுவை சொட்ட ஆராய்ந்துள்ளார்.

பெரிய புராண மேற்கோளுடன் தொடங்கும் இந்நூல், வன்தொண்டர் காலம், சுடர்விட்டு ஒளிரும் சுருங்கிய வாழ்வு, வனப்புமிக்க வழவினன், நயத்திற்கு நம்பியாரூரர், நால்வர் பற்றிய ஒப்புநோக்கு, தமிழ் இசைக்கு புத்துயிர் அளித்த தகைமை, தோழமை நெறி, இரு உலக இன்பங்களை இறைஞ்சி நின்றவர், சடையின் தன் காதலனும் சட்டத்துறையும் வரலாற்று உணர்ச்சிக்கு வித்திட்டவர், தென் இசைவாழ்த் திருத்தொண்டத் தொகைதந்தவர், கொடுவினை நீங்க குறையாத் தமிழ் ஓதிடுகவென ஏறக்குறைய 30 தலைப்புகளில் சுந்தரரைக் காண வேண்டிய கண்டுகொண்டு ஈழவேந்தன் அவர்கள் காணும் முறை சிந்தனைக்கு நல்விருந்தாய் அமைகிறது.

ஒரு சமயச் சான்றோரின் வரலாற்றை எவ்விதம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஊறு செய்யாத முறையில் சுவைபடச் சுருக்கி இளைஞர் இதயத்தை ஈர்க்கும் முறையில் நூல் வரையவேண்டும் என்பதற்கு ஈழவேந்தன் அவர்களின் இந்நூல் நல்லதோர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

இந்நூலின் தகைமையை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் திரு. சி. கதிரவேலுப் பிள்ளை பா. உ. அவர்களும் அளித்துள்ள அணிந்துரைகள் ஏற்றமுற எடுத்து இயம்புகின்றன.

சுருங்கக்கூறின் காலத்தின் தேவையை இந்நூல் இனிது நிறைவு செய்கிறதென்று கூ...லாம்.

# குடமுழுக்கு மலர் வெளியீட்டு விழா

# சிவபூசையில் கரடி!

# அழையாமல் நுழைந்த பனியரின் கூத்து!

# சைவ அறிஞர்கள் அவமதிப்பு! பக்தர்கள் திகைப்பு, மக்கள் கொதிப்பு!

காரைநகர், திக்கரை முருகமூர்த்தி கோவில் குடமுழுக்கு விழா மலர் வெளியீட்டு விழா சென்ற வாரம் ஏற்பாடாகி, ஈழம்போற்றும் பல சைவ அறிஞர்கள் சிறப்பு சொற்பெருக்காற்ற அழைக்கப்பட்டிருந்தார்கள் குறிப்பிட்ட நேரத்தில் மாற்றுன் ஏற்படுத்திய கபடநாடகத்தால் விழா ஆரம்பிக்க படாவிடினும், காரைநகர் வாழ் சைவ பெருமக்கள் ஆலயமே என்றும் கண்டிராத வகையில் திரளாக வந்து இருந்தனர். வந்து குதித்தனர் காவற்துறையினர். இதனால் ஏற்பட்ட திகைப்பு மாறமுன்னர் பல கையாட்கள் புடைசூழ நுழைந்தார் வட்டுக்கோட்டை எம். பி. திரு. சண்முகம் நிச்சாட் ஆறுமுகம் தியாகராசா. பல சிரமங்களுக்கிடையே ஒரு தனிப்பட்ட மனிதனாலும் குடமுழுக்கு விழா சபையிலும் ஏற்பாடாகி இருந்த வெளியீட்டு விழாவை குழப்பி, தனது சர்வதிகாரத்தை காரைநகர் மக்கள் மத்தியில் காட்ட, தனது தொகுதிக்கே காவற்துறையினரின் பாதுகாப்புடன் வந்து, தான் ஒரு தேசிய பேரவை உறுப்பினராக இருந்தும் தன்னை அழைக்கவில்லையென்றும், நிகழ்ச்சி நிரலில் தனக்குரிய மதிப்பை அளிக்கசபையினர் மறுத்துவிட்டனர் என்று பிரச்சினையை - கிளப்பினார்.

இது சமய விழாவில்லை இது ஒரு கட்சியினர் விழா வென காவற்துறை அதிபரிடம் முறையிட்டு அவர்களின் உதவியுடன் தலைமைப் பதவியை கைப்பற்றுவதற்காக மேடைக்குப் பாய்ந்தார். அவ்வேளையில் விழாவிற்கு தலைமை வகிப்பதற்காக நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருந்த திரு. என். சபாரத்தினம், பாராட்டுரை வழங்க வந்த திரு. ஸ்ரீகாந்தா, திரு. கி. பி. ஹரன், பண்டிதர் க. மயில்வாகனம், மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா ஆகியோர் மேடையில் வீற்றிருந்தார்கள். இந்த தருணத்தில்தான்மேடைக்கு பாய்ந்து வந்த தியாகராசா திடீரென ஒலிவாங்கிக்கு முன்னே சென்று ஏதோ பேச ஆரம்பித்தார்.

இது அங்கு வருகை தந்திருந்த முருக பக்தர்களுக்கெல்லாம் பெரும் ஆச்சரியமாக இருந்தது. விழாவிற்கு தலைமைவகிக்கவேண்டியவர் அங்கிருக்க, இவர் தான் தோன்றித்தனமாகவும், ஆணவத்திமிருடனும் தலைமை வகிக்க சென்ற பண்பாடற்ற — அநாகரிகச் செயலைக் கண்டு சைவப் பெருமக்கள் குமுறிக் கொதித்தெழுந்தனர்.

மேலும் இவ் விழாவில் தொடர்ந்து நடைபெற்ற பல சம்பவங்கள் தியாகரின் சின்னத்தனத்தையும் நாத்திகப் போக்கையும் யாரும் எளிதில் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

அங்கு பாராட்டுரை வழங்க வந்த நாவலர் சபை பொதுச் செயலாளர் திரு. கி. பி. ஹரன், திரு. என். கனகரத்தினம் பண்டிதர் க. மயில்வாகனம் ஆகியோர் குடமுழுக்கு விழா மலர் ஆசிரியர் என மலரின் குறிப்பிடப்பட்ட இளஞ்சிங்கம், மறத்தமிழன் சமயத்தொண்டன் ஐ. தி. சம்பந்தனின் உழைப்பையும் சேவையையும் திறமையையும் மனந்திறந்து போற்றும்பொழுது அவர்களைமுறைத்துப்பார்த்தும், திரண்டிருந்த மக்கள் சம்பந்தனின் சேவையை உணர்ந்து ஆரவாரித்து கைதட்டிய போது அதை வெறித்துப்பார்த்ததும் மக்களிடையே அருவருப்பை ஏற்படுத்தினர் பனியர்.

ஈழத் தமிழகம் போற்றும் பண்டிதர் க. மயில்வாகனம் மலரைப்பற்றி ஆய்வுரை நிகழ்த்தி சிறப்பை எடுத்தியம்பிக்கொண்டிருக்கும்போது "உங்கள் பேச்சை குறையுங்கள், அதிகம் பேசவேண்டாம்! என சர்வாதிகாரமாக பனியர் கட்டளையிட்டார். பண்டிதர் கௌரவமாக பேச்சை நிறுத்திவிட்டார்.

பாராட்டுரைகட்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், நல்லை ஆதின முதல்வர் சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் பாராட்டுரை வழங்க வந்தபோது மாலை சூட்டி வரவேற்பது மரபு அல்ல என்பதால் சுவாமி அவர்களை விழுந்து வணக்கம் செய்வதன் பொருட்டு அங்கு மேடைக்கு சென்ற சமூக சேவையாளரான திரு. க. ஆறுமுகத்தை நோக்கி "ஓய் புறக்டரே ஏன் அங்கிருந்து இங்கு வந்தாய்! நீ அந்த இடத்தில் அல்லவா இருந்தாய் இங்கு ஏன் வர வேண்டும்?" என்று தரக்குறைவான வார்த்தைகளை வாரி இறைத்து பண்பற்ற முறையில் பேசியபொழுது குழுமியிருந்தவர்கள் ஆர்ப்பரித்தெழுந்தனர். அங்கு வீற்றிருந்த சைவ பெரியார்கள் மக்களிடையே அமைதியை நிலைநிறுத்தினர்.

சுவாமிகள் ஆசியுரை வழங்க சென்றபோது சம்பிரதாயப்படிமேடையருகே விரைந்து சென்று சுவாமிகள் மு... விழுந்து வணங்கிய ஒரு சைவ அன்பரின் உள்ள முருக்கும் பக்தி எல்லோர் கண்களிலும் அன்புக் கண்ணீரை வரவழைத்தது.

சுவாமிகள் ஆசியுரையில் மலரின் கண்ணே மலர்ந்துள்ள எண்ணற்ற, மதிப்பிட முடியாத கட்டுரைகளின் கருத்துச் செறிவுகளை போற்றிப் பாராட்டி பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில்

"சுவாமி அவர்களே உங்கள் பேச்சைக் குறையுங்கள் அடக்கமாக பேசுவீர், அதிகம் பேசாதீர்கள்" என சுவாமிகள் மீது சீறினார் பனியர், பார்த்துகொண்டிருந்த மக்கள் அசந்து போனார்கள். "இது என்ன சைவசமய மலர்வெளியீட்டு விழாவா, அன்றேல் பனியரின் பேய்க்கூத்தா?" என குமுறினார்கள். சைவ உலகம் போற்றும் சுவாமிகளோடு அநாகரிகமாக நடந்த தியாகர் மீது ஆத்திரம் மேலிட்ட மக்கள் கூட்டத்தில் இருந்து "பனியரே உம் கூத்தை இங்கு காட்டாதீர்! மேடையிலிருந்து கீழே இறங்கு" என பலதிக்குகளிலிருந்தும் கூக்குரல் எழுந்தபோது யாராலும் அக்கொதிப்பை கொஞ்ச நேரத்திற்கு அடக்கமுடியவில்லை. பல பெரியவர்களின் பிரயாசையின் பின் அமைதி நிலவியது.

நிகழ்ச்சியில் குறிப்பிட்டபடி இளைஞர்கட்கும் பாராட்டுரை வழங்குவதற்கு இடம் கொடுக்காது ஏதேச்சதிகார முறையில் கூட்டம் முடிவுற்றது. பனியரின் பேயாட்டத்தை கண்டு அவ்வூர் மக்கள் கொதிப்படைந்தனர். காவற்துறையினரின் உதவி பெற்று தன் ஊரிலேயே சின்னத்தனமாக நடந்து கொண்டார் எனப் பலரும் பேசிக்கொண்டனர். அன்றியும் அவருக்கு பின்னே செல்லும் கையாட்கள்கூட பனியரின் பண்பற்ற நடத்தையை கண்டித்தனர்.

—வ்ளவன்.

# ஒரு இனத்துக்கு ஒரு நீதி சொல்லும் சட்டங்கள் அரசியல் திட்டத்தில்!

இலங்கையின் இரு பெரும் தேசிய இனங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்த நீங்கள் கூட்ட இருக்கும் மாநாடு பற்றி பத்திரிகைகளில் செய்திகள் பெரிதாகவந்த படி இருக்கின்றன. இவற்றைப் பற்றி சிலகாலம் ஊன்றிக் கவனித்தபின்புதான் இந்த மடலை எழுது கிறேன். மனதில் தாக்கத்தைஏற்படுத்தியசெய்தி அண்மையில் நீங்கள் நடாத்திய ஒரு கூட்டம் பற்றியதே. அதில் சிங்கள எழுத்தாளர் தலைவர் கூறிய செய்தியைப் படித்தேன். அதாவது சிங்கள தமிழ் இனங்களை இணைக்கும் காதல் கதைகள் நிறைய எழுதவேண்டும் என்பது அவர் கூற்றாக இருந்தது. கற்பனைக்காதல் கதைகளை நீங்கள் எழுத ஆரம்பிக்கும் முன்பே பல சிங்கள—தமிழ் காதல்கள் நிறைவேறிவிட்டன. நிறைவேற வருகின்றன. அப்படியான சிலரிடம் பழகிப் பார்த்தபோது தேசிய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டன எதுவும் விசேடமாக இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்து, இந்த இரு இனங்களிடையேயும் உறவை வளர்க்க நீங்கள் எடுக்கும் மாநாடு எப்படியிருக்கிறது தெரியுமா? இனிமேல் இணைந்து வாழமுடியாது என்ற நிலைமைக்கு வந்துவிட்ட கணவனும் மனைவியும் நீதிமன்றத்திற்குச் சென்று விவாகரத்து பெற்றுவிட்ட பின்பு, ஒன்றாக வாழ முயற்சிசெய்வது போலிருக்கிறது. ஆனால் முதலில், நீதிமன்றம் வழங்கிய 'விவாகரத்து' அனுமதி திரும்பப் பெறப்பட வேண்டும். புதிதாக இருவரும் பதிவுத் திருமணம் செய்யவேண்டும்.

அதுபோல் முன்பொரு காலம் ஒன்றாக, ஒற்றுமையாக வாழ்ந்த இந்த இரு பெரும் இனங்களையும் பாகு படுத்திக் காட்டும் பல சட்டங்கள் ஆட்சிமன்றத்தால் உருவாக்கப்பட்டு அதிகாரத்தில் இருக்கின்றன. 'சிங்களம் மட்டும்' தரப்படுத்தல், பல்கலைக்கழகத்திற்கு, மாவட்ட கோட்டா முறை... இப்படியான அநீதிகளை விதைத்துக் கொண்டு மாநாடுகள் போட்டு ஒற்றுமை தேட முயற்சிப்பது வீண். அது மட்டுமல்ல, நீங்கள் எடுக்கின்ற இந்த மாநாடு பாமர மக்களிடையே உறவை ஏற்படுத்தவே என தெரிகிறது. இப்படி பெரிய கஷ்டப்படுமளவுக்கு அந்த உறவு சாதாரண மக்களிடையே சீர்கெட்டு இருக்கவில்லை. ஆனால் இந்த இனக்குரோதத்தை உருவாக்கிய, அதை மேலும் வளர்த்து வரும் இடம் ஆட்சிமன்றமும் அதன் அதிகாரமும் தான்.

எனவே நீங்கள் நோய் இருக்கும் இடம் அறியாமல் உடம்பு முழுவதுமே வைத்தியம் செய்ய முற்பட்டுள்ளீர்கள். சிங்களம் பேசத் தெரிந்த ஒரு தமிழ் மகன் ஒரு கிராமத்துக்குபோனால், அவர்கள் ஒத்துழைப்பு தராமல் இருப்பதில்லை. அலுவலகங்களிலோ, உயர்கல்வி பீடங்களிலோ நல்ல சுபாவமுள்ள இரு இனத்தவர்களும் நட்புடன் பழகுவதை அவதானிக்கலாம். குரோத மனப்பான்மையுள்ளவர்கள் இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் உருவாக்கப்பட்ட குழந்தைகளே!

தமிழர்களுக்கு அரசியலில் பாதிப்பு உண்டு என்பதை பல சிங்கள தலைவர்களே ஒத்துக் கொண்டுள்ளார்கள். எனவே அவர்களுக்கு மற்ற இனத்தவர் மீது குரோதம் ஏற்பட நியாயம் உண்டு. ஆனால் சகல அதிகாரங்களையுமுடைய ஒரு இனத்திற்கு

# தேசிய ஒருமைப்பாடு முயற்சி வெறும் மணல் வீடு!

## முற்போக்குப் பேசும் பிற்போக்காளர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்!

சிறுபான்மை இனத்தின்மீது குரோதம் ஏற்பட்டதற்கு காரணம் இருக்க முடியுமா? அதற்கு யார் பொறுப்பு'ஒரு சிலரின் அரசியல் சூதாட்டத்தில் பகடைக்காயாக்கப் பட்டது இந்த உறவு. எனவே, இந்த நோய், இந்த நாட்டில் அதிகாரம் செலுத்தி வரும் சட்ட திட்டங்களில், அவற்றை உருவாக்கும் ஆட்சியாளர்களில் உண்டேயன்றி, நீங்கள் நினைப்பதுபோல், சிங்கள—தமிழ் ஆண்–பெண் உள்ளங்களில் உள்ளதல்ல, வெறும் கதைகளால் உறவை வளர்த்து விடுவதற்கு!

உங்கள் மாநாடு இன்னும் நடைபெறவில்லையாதலால், அதைப்பற்றி முடிவாக கூற முடியாத நிலை. என்னென்ன வழிகள் சொல்லப்போகிறீர்கள்? என்பதை ஆவலுடன் எதிர்பார்ப்போர் ஏராளம். அதோடு இன்ன இன்னவெல்லாம் இடம் பெறுமோ என்று ஏங்குவோரும் ஏராளம்.

**ஈழமாறன்**

இப்படியான ஒரு நிலையில், இவையெல்லாம் செய்வீர்களா என்று ஏங்கி நிற்போர் சார்பில் கேட்க விரும்புகிறேன். இவையெல்லாம் பற்றி இதுவரை எண்ணியிருந்தால், இனிமேலாவது எண்ணுகிறீர்களா என்றும் கேட்க விழைகிறேன்.

### மத சார்பற்ற அரசு

மதத்தை அபினுக்கு உவமை கூறிய உத்தமன் மார்க்ஸ் வழியே சோசலிஸம் படைக்க முயலும் நீங்கள், நாட்டின் அரசியல் யாப்பிலேயே பௌத்த மதத்திற்கு அரச மதம் என்னும் அளவுக்கு முதலிடம் அளித்துள்ளது சிரிப்புக்கிடமானது. இதை அகற்றி, மதத்திற்கும் அரசியலுக்கும் எதுவித தொடர்பும் ஏற்படுத்தாது அரசுக்கு ஆலோசனை வழங்கும் அம்சமும் உங்கள் திட்டத்திலுண்டா?

### தமிழ்மொழிக்கு சம உரிமை

இலங்கையைப் போன்ற சிறியதொரு நாடான சுவிட்சர்லாந்தில்பெரும்பான்மை சிறுபான்மை இனத்தினரின் இரு மொழிக்கும் சமஉரிமை வழங்கப்பட்டு ஆட்சிமொழியாக்கப்பட்டிருக்கின்றன. இங்கு நிலைமை என்ன? 'சிங்களம் மட்டும்' சட்டம் யாப்பிலேயே இடம் பெற்றுவிட்டது. தமிழுக்கு உரிமைகளின்றி, சலுகைகள் சில வழங்கியுள்ளார்கள். அப்படியிருந்தும், இன்னும் எத்தனையோ அரச அலுவல்களில், விண்ணப்ப படிவங்களில் ஆங்கிலமும் சிங்களமும் மட்டும் வீற்றிருப்பதை நீங்கள் காணவில்லையா?

அண்ணனும் தம்பியும் ஒரு வீட்டுக்கு சொந்தக்காரராக இருந்தும், அண்ணன் பெயரில் "மட்டும்" வீட்டை எழுதிவைத்துவிட்டு, தம்பியிடம், "நீயும் வீட்டுக்குள் வந்து போகலாம். உனக்கும் சொந்தம் தான்" என்று கூறுவது போல் இல்லையா? இந்த நாட்டின் சிங்கள-தமிழ் சட்டங்கள்?

பல நாடுகளில் மொழி உரிமைகளைப் பார்க்கும் போது, சிங்களத்திற்கும் தமிழுக்கும் சம உரிமை அளிப்பதில் கஷ்டம் எதுவும் இல்லை. நிருவாகத்தில் எந்த சங்கடமும் ஏற்படாது. ஆனால் சங்கடமான மனதுகளுடன் இருக்கும் அரசியல்வாதிகளை அதட்டிக்கேட்கும் அம்சமும் உங்கள் திட்டத்தில் ஒன்றா?

### தரப்படுத்தல்

பல்கலைக் கழகத்திற்கு செல்வதற்கு ஒரு சிங்கள மாணவனுக்கு இருந்தால் 235 புள்ளிகளுடன் போய் விடலாம். அதே துறைக்கு ஒரு தமிழ் மாணவன் அதை விட கூடுதலான புள்ளிகள் எடுக்கவேண்டுமாம். இந்த அநியாயத்திற்கு கொடுக்கப்பட்ட அழகான சொல் 'தரப்படுத்தல்! இப்படியொரு முறை வேறு எந்த நாட்டிலும் (சோசலிச நாடுகளுட்பட) நாம் கண்டதில்லை. குடியரசு யாப்பில்' 'சிங்களம் மட்டும்' சட்டமும், பௌத்த மதத்திற்கு முதலிடமும் இருக்கும்வரை இப்படியான திட்டங்களை குறை கூற முடியாதுதான். இப்படியான திட்டங்கள் இனிமேலும் ஆட்சியாளரின் மூளைக்குள் உருவெடுக்காமல் செய்வதும் உங்கள் திட்டத்தில் 'ஒன்று?

### 'கல்வி'க்கும் கோட்டாவா?

சடப் பொருட்களுக்கு மட்டுமே இதுவரை 'கோட்டமுறை' இருந்து வந்தது. ஆனால் இந்த நாட்டில் அறிவுக்கும் கோட்டாமுறை இருக்கும் ஒரு அதிசயம் உண்டு. யாழ்ப்பாணத்தில் டாக்டராக, எஞ்சினியராக, வந்து சாதனைகள் பல செய்யக் கூடிய தகுதியுடைய மாணவர்களைகூடக்,"நீங்கள் அந்த அளவுக்கு நாட்டுக்கு எதுவும் செய்யத்தேவையில்லை." என்பதுபோல், அவர்களின் அறிவு முளையிலேயே முளை மழுக்கப்படுகிறது இந்தக் கோட்டா முறையினால். திறமையான டாக்டர்கள், எஞ்சினியர்களை உருவாக்குவதா? அல்லது பல்கலைக்கழக அனுமதியில் பெரும்பான்மையோர் என்பதற்காக கூடிய சலுகைகள் அளிப்பதா? எது நாட்டுக்கு அவசியம் என்பதை அரசுக்கு எடுத்துக் கூறுவதும் ஒரு அம்சமாக உங்கள் திட்டத்தில் உள்ளதா?

(தொடரும்)

# பண மோசடி!

கந்தப்பளையைச்சேர்ந்த நுவரெலியா குறூப் தோட்டத்தில் கொங்கோடியா நடுப்பிரிவு, கீழ்ப்பிரிவு ஆகிய டிவிசன்களில் இருந்து தாயகம் திரும்பும் தொழிலாளர்கள் தங்கள் ஊழியர் சேமலாப நிதி பணம் பெறுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பதாகதொழில் திணைக்களத்திற்கு விண்ணப்பித்திருந்தார்கள்.

இதுசம்பந்தமாகஅவர்கள் இருகலையிலுள்ள இ. தொ. கழக பணிமனையில் புகார் ஒன்றினை கொடுத்ததைத் தொடர்ந்து மேற்படி கழகம் நுவரெலியா குற்றவியல் பிரிவு பொலிஸ் பகுதியின் உதவியுடன் விசாரணை மேற்கொண்டபோது, சம்பந்தப்பட்ட தொழிலாளரின் பணமும், ஏனைய தொழிலாளர்களின் பணமும் ஏற்கனவே ஒரு வருடகாலத்திற்கு முன்பு தோட்ட நிர்வாகிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டதாக அறியவருகிறது.

இது விடயமாக ஊழியர் சேமலாப நிதி திணைக்களம், குடியேற்ற வெளியேற்ற திணைக்களம், இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆகியன கூட்டாகச் சேர்ந்து நடவடிக்கை எடுக்கும் முகமாக புகார் ஒன்றினை கழகத்தின் பொறுப்பாளர் திரு. வ. ஆறுமுகநாதன் அனுப்பியுள்ளார்.

தோட்டத்தொழிலாளர்களின் ஊழியர், சேமலாப நிதிப் பணம் கிடைக்கவில்லையென நாளுக்கு நாள் புகார்கள் கிடைத்த வண்ணமாய் இருக்கின்றன. தாயகம் திரும்புபவார்கள் இம்மோசடிக்குள்ளானதைத் தொடர்ந்து நுவரெலியா குற்றப்பிரிவு பொலிசார் விசாரணை செய்து வருகின்றனராம்.

கந்தப்பளையைச் சேர்ந்த கோட்பெல் தோட்டத்தில் கடந்த 25-8-72ல் வேலை பார்த்துக்கொண்டிருந்த பொழுது காட்டெருமை ஒன்றினால் குத்திக்கொலை செய்யப்பட்ட திரு. காசி கங்காணி என்பவருக்கு இதுவரை நஷ்ட ஈடு பணத்தை தோட்ட நிர்வாகம் கொடுக்கவில்லை.

நஷ்டஈடுகோரி சம்பந்தப்பட்டவரின் மனைவி திருமதி காசி மெய்யாத்தால் சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு இ. தொ. கழகம் வாயிலாக விண்ணப்பித்தபோது நஷ்ட ஈடு ஆணையாளர் காலஞ்சென்ற திரு. காசி என்பவருக்கு 4580 ரூபாய் நஷ்ட பணமாக வழங்கும்படி கட்டளையிட்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட தோட்ட நிர்வாகம் இதுவரையில் பணத்தைக் காப்புறுதிகூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிவைக்கவில்லையென மேற்படிக் கழகப் பொறுப்பினர் திரு. வ. ஆறுமுகநாதன், நடவடிக்கை எடுத்தபோது அறியவருகிறது. பாதிக்கப்பட்டதொழிலாளியின் குடும்பத்தவருக்கு தோட்ட நிர்வாகம் பாராமுகமாய் நடந்துகொள்வதைக் குறித்து கழகம் தொடர்ந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது.

## மாவட்ட குழு அமைப்பு

தமிழர் கூட்டணியின் கிளிநொச்சி தொகுதி மாவட்டக் குழு அமைப்புக் கூட்டம் 15-9-74 காலை 10மணிக்கு திரு. ஆனந்தசங்கரி பா. உ. அவர்களது இல்லத்தில் நடைபெறும். கூட்டணி ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் வேண்டுகோள்விடுத்திருக்கிறார்.

### வன்னியரை . . .

—5-ம் பக்கத் தொடர்

பற்றி பெருமை பேசும் நாம் காலம் சுமத்தியுள்ள துன்பச் சுமையை உள்ளத் தூய்மையோடும் உள்ளத் துணிவோடும் தாங்க உறுதி பூண்போமாக.

"Patriotism is not a short and frenzied outburst of emotion, but the tranquil and steady dedication of a lifetime" (நாட்டுப் பற்று என்பது ஒரு குறுகிய காலத்தில் கிளர்ந்து எழும் உணர்ச்சிப் பெருக்கல்ல மாறாக வாழ் நாள் முழுவதையும் அதற்கென அமைதியாகவும் நிலையாகவும் அர்ப்பணிப்பதேயாகும்) என்று அட்லை ஸ்டீபன்சன்(Adlai Stevenson) என்ற அமெரிக்க அறிஞன் மொழிந்ததிற்கமைய எம் ஈழத்தமிழகத்தின் விடுதலைக்காக எம் வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணிக்க எம்மைத் தயார் செய்வோமாக.

 தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது.

# கல்லாநிதியும் - கலாநிதியும்

யாழ் வளாகத் தலைவர் கல்லாநிதி கைலாசபதிக்கு அண்மையில் கொழும்பு வளாகத் தமிழ் விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்களால் ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. விருந்தில் இன்னுமொரு சட்ட கலாநிதியும் கலந்து கொண்டார்.

பாராட்டுரை வழங்குவதற்கு ஒரு பத்து நிமிடங்களுக்கு முன் தன் கையில் வைத்திருந்த சுதந்திரனை அங்கு வந்திருந்த ஒருவரிடம் காட்டி "கைலாசபதியை சுதந்திரனில் நல்லா 'கழட்டி' இருக்கிறார்கள்" என்று சொல்லி மகிழ்ந்தாராம்.

இந்த சட்டக் கலாநிதி பற்றி கல்லாநிதி ஒரு முறை இன்னொரு பொறியியல் கலாநிதியுடன் பேசும் பொழுது "அவரை ஒரு அழுக்கு (Dirt)ப் போலகருதுகிறேன்' என்றாராம்.

இந்தக் கூற்றை பொறியியல் கலாநிதி ஒரு, தமிழ் பிரமுகரிடம் சொன்னபொழுது கல்லாநிதி சொன்னதை நான் ஆமோதிக்கிறேன் ஆனால் அதே நேரத்தில் இப்படிச் சொன்ன கல்லாநிதியை நான் ஒரு அழுக்குப்போல கருதுகிறேன் என்றாராம்!

## சான்றோன் எனக் கேட்டு...!

—எஸ். பி. சே.

'மொழி
மந்தர்க்கு விழி'
என்றார் சான்றோர்
இல்லை...
விழியை விட
வயிறுதான் பெரிது
என்கிறார்
இங்கு சிலர்
இவரையும், சான்றோர்
வரிசையில்
வைத்து...
மகிழ்வாளோ
தமிழ்த்தாய்...?

## காயமடைந்த இளைஞர்!

பொகவந்தலாவைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் 42 தமிழ் இளைஞர்களில் ஒருவரான திரு. சா. சபாரத்தினம் 3-வது மாடியிலிருந்து குதித்து காயமடைந்தார்.

தற்போது அவர் குணமாகிவருவதால் அவரை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு மாற்றி, அவரது பெற்றோர் அவரைப் பார்ப்பதற்கு ஆவனசெய்யுமாறு திரு. கா. பொ. இரத்தினம் நீதி அமைச்சின் நிரந்தரச் செயலாளருடன் தொடர்பு கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

## சிங்களச் சிறையில் உணர்ச்சிக் கவிஞர்!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சிறையில்இன்றுடன் இரண்டாண்டுகள் 85நாட்கள்

## மொரீஷஸ் தீவில் தமிழ் உத்தியோக மொழி

நிலப்பரப்பு—810சதுரமைல்
மக்கள் தொகை—834,000
தமிழர்கள் —1½இலட்சம்.
அரசு மொழி—ஆங்கிலம்
உத்தியோகமொழிகள் — தமிழ், பிரான்சு.

## எழுத்தாளர்களுக்கு

சுதந்திரனுக்கு அனுப்பப்படும் கட்டுரை, கதை, கவிதைகள், நல்ல தமிழில் தரமாக எழுதப்பட வேண்டும். படைப்புக்கள், தமிழின் விடுதலைக்கு ஆக்கமும், ஊக்கமும் நல்கும் வகையில் அமையவேண்டும்.

தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதவும்.

—ஆர்.


ஞானப் பொறிகள்

"எப்போதேனும் சரி, முதுகு வளைந்தவாறு உட்கார்ந்து கொண்டு தியானம் செய்ய முயற்சி பண்ணுவோமானல் நமக்கு நாமே தீங்கிழைத்துக்கொள்கிறோம்."

—விவேகானந்த வாக்கு.

10 மில்க்வைற் சவைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி தாலவிலாசம் என்ற புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்காரத் தொழிற்சாலை,
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.



கெபிட்டல்

ஜெய்சங்கர் விஜயகிரிஜா சுந்தரராஜன் மனோரமா




இளம் உள்ளங்களே,
உங்கள் உள்ளங்கள்
தித்திக்கும் தேன் பாகாக
மகிழ வேண்டுமாயின்
இன்றே பாருங்கள்.

ஸ்ரீகாந் ஷப்னம்
தேங்காய் சீனிவாசன்
2-வது மாதம்
புதுமுகம் கவிதா



3வது மாதம்

செல்லமகால்

ஜெய்சங்கர்
ஜெயலலிதா
(இரட்டை வேடங்கள்)
எம்.என். ராஜம்
புஷ்பலதா
சோ, ரி.கே. பகவதி
நடித்த

வந்தாளே மகராசி



19-ம் திகதி முதல்

பிளாஸா திரையில்

சிவாஜி ஜெயலலிதா, சௌகார் ஜானகி, சந்திரபாபு -நடித்த-

நீதி [ஈஸ்ட்மென் கலர்]



2-வது வாரம்

கிங்ஸ்லி

எஸ். எஸ். ராஜேந்திரன், தேவிகா, காஞ்சனா நடித்த-

மு. கருணாநிதியின்

மறக்க முடியுமா



கடைசி வாரம்

கெப்பிட்டல்—விஜயா (மட்டுநகர்)

ஸ்ரீகாந்த், ஜெயா. வி. கே. ராமசாமி நடித்த-

குகநாதனின்

காசி யாத்திரை



எமது அடுத்த வெளியீடு

கிங்ஸ்லி—வெலிங்டன் (யாழ் நகர்)

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த-

கே. பாலசந்தரின்

எதிரொலி


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகாமாவத்தை 194 எ. இலக்கத்தில் 1974ம் வருடம் செப்டம்பர் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.